Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



## பொருளுரை

**தமிழ்:** தமிழ், இயல் இசை நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது; முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது; ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது; சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப் புலவர்களால் காக்கப்பட்டது.
**கடல்:** கடல், முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது. வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது. மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது; தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது.

## விரிவான விளக்கம்

முச்சங்கங்களால் வளர்க்கப்பட்ட முத்தமிழின் இயல்புகளையும் கடலின் இயல்புகளையும் ஒப்பிட்டு ஆசிரியர் பாடியுள்ளார். முச்சங்கத்தில் இருந்த சங்கப் பலகை குறித்து திருவிளையாடற் புராணத்தின் மூலம் நாம் அறிய முடிகிறது. புலவர்கள் இயற்றும் செய்யுள்களை மதிப்பீடு செய்வது சங்கப் பலகை ஆகும். தமிழுக்கு அணி செய்வது சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்ற ஐம்பெருங் காப்பியங்களாகும்.

மெத்த + அணிகலன் – சிறப்புடைய அணிகலன்
மெத்த + வணிகலம் – மிகுதியான கப்பல்கள்.

# கூடுதல் வினாக்கள்

## பொருள் தருக

| | | | |
|---|---|---|---|
| 1. துய்ப்பது | – கற்பது, தருதல் | 4. ஈண்டு | – இங்கு, இவ்வாறு |
| 2. மேவலால் | – பொருந்துதல், பெறுதல் | 5. நித்தம் | – அனுதினமும், நாளும் பொழுதும் |
| 3. ஆழி | – கடல் | | |

## பிரித்தெழுதுக

| | | | |
|---|---|---|---|
| 1. சங்கப்பலகை | – சங்கம் + பலகை | 2. முத்தமிழ் | – மூன்று + தமிழ் |
| 3. முச்சங்கம் | – மூன்று + சங்கம் | 4. முச்சங்கு | – மூன்று + சங்கு |

## இலக்கணக் குறிப்பு தருக

| | |
|---|---|
| 1. முத்தமிழ், முச்சங்கம் | பண்புத்தொகைகள் |
| 2. காக்க | வியங்கோள் வினைமுற்று |
| 3. கிடந்த | பெயரெச்சம் |

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் – நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு.

**1. இப்பாடல் இடம்பெற்ற நூல் ............... .**
அ) புறத்திரட்டு ஆ) தனிப்பாடல் திரட்டு
இ) நல்வழி ஈ) மூதுரை
**விடை ஆ) தனிப்பாடல் திரட்டு**

**2. இந்நூலின் ஆசிரியர் ............... .**
அ) தமிழழகனார் ஆ) இளங்குமரனார்
இ) பெருஞ்சித்திரனார் ஈ) நக்கீரர்
**விடை அ) தமிழழகனார்**

**3. சங்கப்பலகை – பிரித்து எழுதுக.**
அ) சங்க + பலகை ஆ) சங்கம் + பலகை
இ) சங்கு + பலகை ஈ) சங்கப் + பலகை
**விடை அ) தமிழ்ழகனார்**



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



4. **ஆழி – பொருள் தருக.**
அ) ஆழம் ஆ) முத்து இ) கடல் ஈ) கப்பல் **விடை இ) கடல்**

5. **காக்க – இலக்கணக்குறிப்பு தருக.**
அ) வினைத்தொகை ஆ) வியங்கோள் வினைமுற்று
இ) வினையெச்சம் ஈ) வினைச்சொல் **விடை ஆ) வியங்கோள் வினைமுற்று**

**நிரப்புக**

1. **சங்கத்தவர் என்பது ............... ஐ குறிக்கிறது.** **விடை சங்கப்புலவர்**
2. **தமிழ் ............... வளர்ந்தது; ............... வளர்க்கப்பட்டது; ............... காக்கப்பட்டது.** **விடை முத்தமிழாய், முச்சங்கங்களால்,சங்கப்புலவர்களால்**
3. **தமிழுக்கு அணிகலனாய் விளங்குவது ............... .** **விடை ஐம்பெருங்காப்பியங்கள்**
4. **கடல் ............... , ............... ஆகியவற்றைத் தருகிறது.** **விடை முத்து, அமிழ்தம்.**
5. **கடல் ............... செல்லும்படி இருக்கிறது.** **விடை வணிகக் கப்பல்கள்**
6. **கடல் தன் அலைகளால் ............... தடுத்து நிறுத்திக் காக்கிறது.** **விடை சங்கினை**
7. **சந்தக்கவிமணி தமிழழகனார் எழுதிய சிலேடைப் பாடலில் தமிழை ............... உடன் ஒப்பிட்டுள்ளார்.** **விடை கடல்**
8. **தமிழையும் கடலையும் ஒப்பிட்டுக் கவி பாடியவர் ............... .** **விடை சந்தக்கவிமணி தமிழழகனார்**
9. **இரட்டுறமொழிதல் அணியின் வேறு பெயர் ............... .** **விடை சிலேடை அணி**
10. **தமிழழகனார் படைத்துள்ள சிற்றிலக்கிய நூல்களின் எண்ணிக்கை ............... .** **விடை பன்னிரண்டு**
11. **தமிழுக்குரிய அணிகலன் ............... .** **விடை ஐம்பெருங்காப்பியம்**
12. **ஒரு சொல்லோ தொடரோ இரு பொருள்பட அமைவது ............... .** **விடை சிலேடை அணி**
13. **சந்தக்கவிமணி என்று குறிப்பிடப்படுபவர் ............... .** **விடை தமிழழகனார்**
14. **தமிழ்மொழியின் அணிகலன்கள் ............... .** **விடை ஐஞ்சிறுகாப்பியங்கள்**
15. **கடல் ............... வகையான சங்குகளைத் தருகிறது.** **விடை மூன்று**

**குறுவினா**

1. **ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?**
சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

2. **மூன்று வகையான சங்குகள் யாவை?**
**மூன்று வகையான சங்குகள்:** வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம்.

3. **தமிழர் எதனால் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்தனர்?**
நாட்டின் தனிப்பெரும் வளத்தினாலேயே, பண்டைத் தமிழ்மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்தனர்.

4. **இரட்டுற மொழிதல் என்றால் என்ன?**
ஒரு சொல்லோ, சொற்றோடரோ இரு பொருள்பட வருவது இரட்டுற மொழிதல் எனப்படும். இதனைச் "சிலேடை அணி" என்றும் கூறுவர்.

5. **முத்தமிழ் என்பது தமிழுக்கும், கடலுக்கும் எவ்வாறு பொருந்துகிறது?**
முத்தமிழ் : (i) தமிழ் – இயல், இசை, நாடகம்
(ii) கடல் – முத்தினை அமிழ்ந்து எடுத்தல்

☆ ☆ ☆



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



மொழி – அமுதஊற்று | விரிவானம்

# 1 உரைநடையின் அணிநலன்கள்

– எழில்முதல்வன்

## ஆசிரியர் குறிப்பு



மா.இராமலிங்கம் (எ) எழில்முதல்வன் மாநிலக் கல்லூரியில் பயின்று அங்கேயே பேராசிரியர் பணியைத் தொடர்ந்தவர். குடந்தை அரசு ஆடவர் கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர். மரபுக் கவிதை, புதுக்கவிதை படைப்பதில் வல்லவர்.

**படைப்புகள் :** இனிக்கும் நினைவுகள், எங்கெங்கு காணினும், யாதுமாகி நின்றாய்.

**சிறப்பு :** 'புதிய உரைநடை' என்னும் நூலுக்காக சாகித்திய அகாதெமி பரிசு பெற்றவர்.

## பாடப்பகுதி

எழில்முதல்வன் அவர்கள் எழுதிய 'புதிய உரைநடை' என்னும் நூலிலுள்ள 'உரைநடையின் அணிநலன்கள்' என்ற கட்டுரையின் சுருக்கம் உரையாடல் வடிவமாக மாற்றித் தரப்பட்டுள்ளது.

## பாடச் சுருக்கம்

சங்கப் புலவர் ஒருவரும் இணையத் தமிழனும் தமிழ் உரைநடை வளம் குறித்து உரையாடுகிறார்கள். அந்த உரையாடலில் பொதிந்துள்ள முக்கியக் கருத்துகள் பாடச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

- தமிழ் இலக்கியங்கள் சங்கப் பாடல்களுக்குப் பின் அறஇலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், சந்தக் கவிதைகள், புதுக்கவிதைகள், நவீன கவிதைகள் என்ற முறையில் மாற்றமடைந்துள்ளன.
- உரைநடையின் வளர்ச்சியானது சிறுகதை, கட்டுரை, புதினம் என்று வளர்ச்சியடைந்துள்ளன.
- உணர்ச்சிகளைக் காட்ட உவமை கொண்ட மொழிநடையே ஏற்றதாகும். தற்கால இலக்கியத்தில் உவமைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

  "திருப்பரங்குன்றத்தின் அழகைப் பார்ப்பதற்கென்றே இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக் கண்ணாடிகளைப் போல் வடபுறமும் தென்புறமும் நீர் நிறைந்த கண்மாய்கள்."

  **– நூல் : குறிஞ்சி மலர்; ஆசிரியர் : நா.பார்த்தசாரதி**
- சங்க காலத்திற்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் வாழ்ந்த புலவர் தண்டி, "உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்" என்று உருவகத்தைப் பற்றி எழுதியுள்ளார்.
- உருவகம் பயின்று வந்துள்ள தற்கால கவிதை: 'முகநிலவில் வியர்வை முத்துகள் துளிர்த்தன'
- உருவகம் பயின்று வந்துள்ள உரைநடை: "களம்புகத் துடித்து நின்ற உனக்கு, **வெற்றிச்சாறு** கிடைத்துவிட்டது, உண்டு மகிழ்ந்தாய்; உன் புன்னகைதான் அதற்குச் சான்று" **– அறிஞர் அண்ணா**

**எடுத்துக்காட்டு உவமை அணி :**

உவம உருபு மறைந்து வந்தால், அதற்கு எடுத்துக்காட்டு உவமை அணி என்று பெயர்.

**எ.கா.** புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும். **– திருக்குறள்**

எடுத்துக்காட்டு உவமை அணியை உரைநடையில் பயன்படுத்தும் போது அஃது 'இணை ஒப்பு' (analogy) எனப்படுகிறது.

**எ.கா.** "ஊர் கூடிச் செக்குத் தள்ள முடியுமா? என்று கேட்கிறார்கள், ஊர் கூடின பிறகுதான் செக்குத் தள்ள வேண்டும் என்று காத்திருப்பவர்களின் காரியம் கைகூடாது. புரோகிதருக்காக அமாவாசை காத்திருப்பதில்லை."

**– நூல் : மழையும் புயலும்; ஆசிரியர் : வ. ராமசாமி**

**அஃறிணைப் பொருள்களை உயர்திணையாகக் கருதி இலக்கியம் படைக்கும் முறை:**

'ஞாயிறு, திங்கள் நெஞ்சம் போன்ற அஃறிணைப் பொருள்கள், சொல்லுந போலவும், கேட்குந போலவும் சொல்லியாங்கு அமையும்"

**– நூல் : தொல்காப்பியம் (செய்யுளியல் 192); ஆசிரியர் : தொல்காப்பியர்**

சங்க காலத்தில் உயிர் இல்லாத பொருள்களை உயிர் உள்ளன போலவும், உணர்வில்லாத பொருள்களை உணர்வுடையன போலவும் கற்பனை செய்து எழுதும் முறையானது தற்காலத்தில் **'இலக்கணை'** எனப்படுகிறது.



Click Here : https://bit.ly/3xcdrBt
Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**எ.கா.** 'சோலையில் புகுவேன்; மரங்கள் கூப்பிடும்; விருந்து வைக்கும், ஆலமர நிழலில் அமர்வேன்; ஆல், 'என் விழுதைப் பார். அந்த அரசுக்கு இஃது உண்டா?' என்னும் அரசு கண்ணிற்படும். 'யான் விழுதின்றி வானுற ஓங்கி நிற்கிறேன், என்னை மக்கள் சுற்றிச் செல்கிறார்கள், காண் என்னும் 'வேம்பு, என் நிழல் நலஞ்செய்யும். என் பூவின் குணங்களைச் சொல்கிறேன் வா' என்னும். அத்தி, நாகை, விளா, மா, வில்வம் முதலிய மரங்கள் விளியாமலிருக்குமோ? சிந்தனையில் அவைகளின் நுட்பங்கள் விளங்கும். மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது இவர்வேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன் மனம் அமைதி எய்தும்." **– தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாண சுந்தரனார்**

**உரைநடையில் மோனையும் எதுகையும் :**

"தென்றல் அசைந்து வரும் தென்தமிழ் நாட்டில் அமைந்த திருக்குற்றாலம், மலை வளம் படைத்த பழம்பதியாகும். அம்மலையிலே, கோங்கும் வேங்கையும் ஓங்கி வளரும்; குரவமும் முல்லையும் நறுமணங் கமழும்! கோலமாமயில் தோகை விரித்தாடும்; தேனுண்ட வண்டுகள் தமிழ்ப் பாட்டிசைக்கும்; இத்தகைய மலையினின்று விரைந்து வழிந்திறங்கும் வெள்ளருவி வட்டச் சுனையிலே வீழ்ந்து பொங்கும் பொழுது சிதறும் நீர்த் திவலைகள் பாலாவிபோற் பரந்தெழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக் குலாவும்" **– நூல் : தமிழின்பம்; ஆசிரியர் : இரா.பி. சேதுப்பிள்ளை**

**ஒரே சொல் மீண்டும் மீண்டும் வருதல் :**

**எ.கா.** "வாழ்க்கை நடத்துவதற்குப் பொருள்கள் பல வேண்டும்; அரிசி, காய், கனி முதலியவை வேண்டும். உடை, வீடு முதலியவை வேண்டும். காசும் காகித நோட்டும் வேண்டும். இன்னும் பல வேண்டும். இவற்றை ஆளும் அறிவும் வேண்டும்" **– நூல் : நாட்டுப்பற்று; ஆசிரியர் : மு. வரதராசனார்**

**முரண்படு மெய்ம்மை** (Paradox) **:**

படிப்பவருக்கு முரண்டுபடுவது போலத் தோன்றினாலும் உண்மையில் முரண்படாத மெய்ம்மைகள் ஆகும்.

**எ.கா:** 'இந்த உலகத்தில் பயம் என்ற ஒன்றைத் தவிர வேறு எதற்கு நாம் பயப்பட வேண்டும்?'

**சொல் முரண்** (Oxymoron) **:**

முரண்பட்டச் சொற்களை சேர்த்து எழுதுவது ஆகும் (எ.கா.) கலப்பில்லாத பொய்.

**எதிரிணை இசைவு** (Antithesis) **:**

சொல்லும் முறையில் அழுத்தம் கொடுப்பதற்காக எதிரும் புதிருமான முரண்படு கருத்துகளை அமைத்து எழுதுவதாகும்.

"குடிசைகள் ஒரு பக்கம்; கோபுரங்கள் மறுபக்கம்; பசித்த வயிறுகள் ஒருபக்கம்; புளிச்சேப்பக்காரர்கள் மறுபக்கம்; மெலிந்த எலும்புக்கூடுகள் ஒரு பக்கம்; பருத்த தொந்திகள் மறுபக்கம்; கேடுகெட்ட இந்தச் சமுதாயத்திற்கு என்றைக்கு விமோசனம்? தோழர்களே, சிந்தியுங்கள்!" **– ப.ஜீவானந்தம்**

விடை தரவேண்டிய தேவை இல்லாமல் கேள்விலேயே பதில் இருப்பதைப் போல எழுதுதல்.

**எ.கா.** "அவர் (பெரியார் ஈ.வெ.ரா.) பேசாத நாள் நாள் உண்டா? குரல் கேட்காத ஊர் உண்டா? அவரிடம் சிக்கித் திணறாத பழமை உண்டா? எதைக் கண்டு அவர் திகைத்தார்? எந்தப் புராணம் அவரிடம் தாக்குதலைப் பெறாதது?... எனவேதான், பெரியாருடைய பெரும் பணியை நான் ஒரு தனிமனிதனின் வரலாறு என்றல்ல ஒரு சகாப்தம் – ஒரு கால கட்டம் – ஒரு திருப்பம் – என்று கூறுகிறேன்" **– அறிஞர் அண்ணா**

**சொல்லையோ கருத்தையோ அடுத்தடுத்து வைக்கும் உணர்ச்சிப் பெருவெள்ளத்தின் உச்சநிலை** (Climax) **:**

"இந்தியாதான் என்னுடைய மோட்சம்; இந்தியாவின் நன்மைதான் என் நன்மை. இந்தியாதான் என் இளமையின் மெத்தை; என் யௌவனத்தின் நந்தவனம்; என் கிழக்காலத்தின் காசி" **– பாரதியார்**

### தெரிந்து தெளிவோம்

**பண்டைய இலக்கியத்தில் சிறுமலை (திண்டுக்கல் மாவட்டம்)**

"வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும்
மாவும் பலாவும் சூழ் அடுத்து ஓங்கிய
தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்." **– சிலப்பதிகாரம், காடுகாண் காதை 53–55**

**முதல் தமிழ்க் கணினி**

1983–ஆம் ஆண்டு செப்டம்பரில் டி.சி.எம். டேட்டா புரொடக்ட்ஸ் என்ற தனியார் நிறுவனம் திருவள்ளுவர் பெயரில் முதல் தமிழ்க் கணினியை உருவாக்கியது. சென்னை தேனாம்பேட்டையில் இருந்த புள்ளிவிவரத் துறை அலுவலகத்திற்கும் தலைமைச் செயலகத்திற்கும் கோப்புகளைப் பரிமாறிக் கொண்ட முதல் தமிழ்க் கணினி 'திருவள்ளுவர்' ஆகும்.

☆ ☆ ☆



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000


This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores





மொழி – அமுதஊற்று | கற்கண்டு

# 1 எழுத்து, சொல்

## மன வரைபடம்











Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores






## கூடுதல் வினாக்கள்

**சான்று தருக.**

**1. பொதுமொழி**

அ) கண்ணன் வந்தான்    ஆ) வேங்கை
இ) படி    ஈ) கண்ணன்

**விடை** ஆ) வேங்கை

**2. முதனிலை திரிந்த தொழிற்பெயர்**

அ) சுடு    ஆ) சூடு    இ) சுடுதல்    ஈ) சுட்டவன்

**விடை** ஆ) சூடு

**3. தொடர்மொழி**

அ) ஆடு மேய்ந்தது    ஆ) அருகில்
இ) அம்மா    ஈ) அசையாமை

**விடை** அ) ஆடு மேய்ந்தது

**4. இன்னிசை அளபெடை**    CBSE மார்ச்–20

அ) உரனசைஇ    ஆ) கெடுப்பதூஉம்
இ) உறாஅர்க்கு    ஈ) தொழாஅர்

**விடை** ஆ) கெடுப்பதூஉம்

**5. எதிர்மறைத் தொழிற்பெயர்**

அ) நடத்தல்    ஆ) நடவாமை
இ) நடந்து    ஈ) நடந்த

**விடை** ஆ) நடவாமை

**6. வினையாலணையும் பெயர்**

அ) பாடியவள்    ஆ) பாடினாள்
இ) பாடுதல்    ஈ) கண்ணன்

**விடை** ஆ) பாடியவர்

www.surabooks.com



Click Here : https://bit.ly/3xcdrBt    Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



7. **தொழிற்பெயர்**
அ) ஈதல் ஆ) ஈ இ) ஈந்தான் ஈ) ஈந்து
**விடை அ) ஈதல்**

8. **தொடர் மொழி**
அ) கண்ணன் ஆ) மலர் வீட்டுக்குச் சென்றாள்
இ) எட்டு ஈ) ஓடு
**விடை ஆ) மலர் வீட்டுக்குச் சென்றாள்**

9. **தனி மொழி**
அ) படித்தான் ஆ) சுவைத்தேன்
இ) சுவையான தேன் ஈ) பலகை
**விடை அ) படித்தான்**

10. **சொல்லிசை அளபெடை**
அ) வரனசைஇ ஆ) ஓஒதல்
இ) எடுப்பதூஉம் ஈ) படாஅ
**விடை அ) வரனசைஇ**

11. **செய்யுளிசை அளபெடை**
அ) ஆஅளிய ஆ) உடுப்பதூம்
இ) உரனசைஇ ஈ) கெடுப்பதூஉம்
**விடை அ) ஆஅளிய**

12. **சொல்லிசை அளபெடை**
அ) வரனசைஇ ஆ) ஓஒதல்
இ) எடுப்பதூஉம் ஈ) படாஅ
**விடை அ) வரனசைஇ**

**நிரப்புக**

1. **சார்பெழுத்து ............... வகைப்படும்.**
அ) எட்டு ஆ) பத்து இ) ஒன்பது ஈ) ஆறு
**விடை ஆ) பத்து**

2. **அளபெடை ............... வகைப்படும்.**
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து
**விடை அ) இரண்டு**

3. **அளபெடை என்பது ...............**
அ) எழுத்துகள் குறுகி ஒலித்தல் ஆ) எழுத்துகள் நீண்டு ஒலித்தல்
இ) எழுத்துகள் இயல்பாய் ஒலித்தல் ஈ) மாத்திரை குறைதல்
**விடை ஆ) எழுத்துகள் நீண்டு ஒலித்தல்**

4. **உயிரளபெடை ............... வகைப்படும்.**
அ) ஆறு ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு
**விடை இ) மூன்று**

5. **செய்யுளிசை அளபெடையின் வேறு பெயர் ............... .**
அ) உயிரளபெடை ஆ) இன்னிசை அளபெடை
இ) இசைநிறை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை
**விடை இ) இசைநிறை அளபெடை**

6. **செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் அளபெடுப்பது ............... .**
அ) ஒற்றளபெடை ஆ) இன்னிசை அளபெடை
இ) சொல்லிசை அளபெடை ஈ) செய்யுளிசை அளபெடை
**விடை ஆ) இன்னிசை அளபெடை**

7. **செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய நெட்டெழுத்துக்கள் அளபெடுப்பது ............... .**
அ) ஒற்றளபெடை ஆ) இசைநிறை அளபெடை
இ) இன்னிசை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை
**விடை ஆ) இசைநிறை அளபெட**

8. **செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாக திரிந்து அளபெடுப்பது ............... .**
அ) ஒற்றளபெடை ஆ) செய்யுளிசை அளபெடை
இ) சொல்லிசை அளபெடை ஈ) இன்னிசை அளபெடை
**விடை இ) சொல்லிசை அளபெடை**

9. **ஒற்றளபெடையில் அளபெடுக்கும் மெய்யெழுத்துக்கள் ............... .**
அ) மெல்லின மெய்கள் வ்,ய்,ல்,ள் ஆ) வல்லின மெல்லின மெய்கள்
இ) மெல்லின மெய்கள் மட்டும் ஈ) ஆய்த எழுத்து மட்டும்
**விடை ஆ) வல்லின மெல்லின மெய்கள்**



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**10. 'ஓஒதல் வேண்டும்' என்பது ............... அளபெடையாகும்.**

அ) செய்யுளிசை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை

இ) இன்னிசை அளபெடை ஈ) ஒற்றளபடை

**விடை அ) செய்யுளிசை அளபெடை**

**11. மொழி ............... வகைப்படும்.**

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து **விடை ஆ) மூன்று**

**12. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமாயின் அது ............... எனப்படும்.**

அ) தனிமொழி ஆ) தொடர்மொழி இ) பொதுமொழி ஈ) கிளைமொழி **விடை ஆ) தொடர்மொழி**

**13. பூ மலர்ந்தது ............... மொழி.**

அ) தனிமொழி ஆ) தொடர்மொழி

இ) பொதுமொழி ஈ) அடுக்குத்தொடர் **விடை ஆ) தொடர்மொழி**

**14. ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தருவது ............... .**

அ) பொதுமொழி ஆ) கனிமொழி

இ) தொடர்மொழி ஈ) கிளைமொழி **விடை அ) பொதுமொழி**

**15. எட்டு என்னும் சொல் பொதுமொழி ஆகும்போது ............... ஆகப் பிரியும் .**

அ) எள்+து ஆ) எட்+டு இ) எள்+டு ஈ) எட்டு+உ **விடை அ) எள்+து**

**16. வேங்கை என்னும் சொல் பொதுமொழி ஆகும்போது ............... ஆகப் பிரியும் .**

அ) வேங்+கை ஆ) வேங்கு+கை

இ) வேம்+கை ஈ) வேம்+ஜ **விடை இ) வேம்+கை**

**17. ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது ............... எனப்படும் .**

அ) தொழிற்பெயர் ஆ) வினைமுற்று

இ) வினையாலணையும் பெயர் ஈ) வேற்றுமைத் தொடர் **விடை அ) தொழிற்பெயர்**

**18. வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் ............... ஆகும் .**

அ) எதிர்மறைத் தொழிற்தொடர் ஆ) முதனிலைத் தொழிற்பெயர்

இ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் ஈ) விகுதி பெற்ற தொழிற்பெயர்

**விடை ஈ) விகுதி பெற்ற தொழிற்பெயர்**

**19. விகுதி பெறாமல் வினைப்பகுதியே தொழிற்பெயராதல் ............... ஆகும் .**

அ) எதிர்மறைத் தொழிற்தொடர் ஆ) முதனிலைத் தொழிற்பெயர்

இ) விகுதி பெற்ற தொழிற்பெயர் ஈ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

**விடை ஆ) முதனிலைத் தொழிற்பெயர்**

**20. விகுதி பெறாமல் முதனிலை திரிந்து வருவது ............... ஆகும் .**

அ) விகுதி பெற்ற தொழிற்பெயர் ஆ) எதிர்மறைத் தொழிற்தொடர்

இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

**விடை ஈ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்**

**21. ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது ............... எனப்படும் .**

அ) வினைமுற்று ஆ) வினையாலணையும் பெயர்

இ) தொழிற்பெயர் ஈ) இடப்பெயர் **விடை ஆ) வினையாலணையும் பெயர்**

**22. நடவாமை என்பது ............... பெயர் .**

அ) வினையாலணையும் பெயர் ஆ) எதிர்மறைத் தொழிற்பெயர்

இ) காலப்பெயர் ஈ) பொருட்பெயர் **விடை ஆ) எதிர்மறைத் தொழிற்பெயர்**

**23. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது**

அ) தொழிற்பெயர் ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர் **விடை ஈ) வினையாலணையும் பெயர்**



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**24. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள் - இத்தொடர்**

அ) வினாத்தொடர் ஆ) தனித்தொடர்
இ) செய்தித்தொடர் ஈ) கலவைத் தொடர்

**விடை ஈ) கலவைத்தொடர்**

**25. வெஃஃகுவார்க்கில்லை, உரனசைஇ - இச்சொற்களில் உள்ள அளபெடைகள்**

அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை
ஆ) இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை
இ) சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை
ஈ) ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை

**விடை அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை**

## கூறியவாறு செய்க.

**1. கெடுவான் கேடு நினைப்பான் (முதனிலை திரிந்த தொழிற்பெயரை எடுத்து எழுதுக)**

அ) கெடு ஆ) நினை இ) கேடு ஈ) வான்

**விடை இ) கேடு**

**2. படா - (செய்யுளிசை அளபெடையாக்குக)**

அ) படாட ஆ) படாஅ இ) படாடா ஈ) பஅடா

**விடை ஆ) படாஅ**

**3. நட - (தொழிற்பெயராக்குக)**

அ) நடந்த ஆ) நடத்தல் இ) நடந்து ஈ) நடந்தான்

**விடை ஆ) நடத்தல்**

**4. பொறு - (வினையாலணையும் பெயராக்குக)**

அ) பொறுத்தல் ஆ) பொறுமை இ) பொறுத்த ஈ) பொறுத்தவர்

**விடை இ) பொறுத்த**

**5. அடித்தல் - (வேர்ச்சொல் தருக)**

அ) அடித்த ஆ) அடி இ) அடித்து ஈ) அடிப்பது

**விடை இ) அடித்து**

**6. அளபெடை (பிரித்து எழுதுக)**

அ) அளபு + எடை ஆ) அளப்பு + எடை
இ) அள + பெடை ஈ) அள + ப் + பெடை

**விடை அ) அளபு + எடை**

**7. தொழாஅர் (அளபெடை நீக்கு)**

அ) தொழாஅர் ஆ) தொழார் இ) தொழா ஈ) தொழாஅ

**விடை இ) தொழா**

**8. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் (அளபெடையின் வகை கூறுக)**

அ) இன்னிசை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை
இ) செய்யுளிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை

**விடை அ) இன்னிசை அளபெடை**

**9. எங்ங்கு (எவ்வகை ஒற்றளபெடை என கூறுக)**

அ) குறில் கீழ் கடை ஆ) குறில் கீழ் இடை
இ) குறலிணை இடை ஆய்தம் ஈ) குறலிணை கடை ஆய்தம்

**விடை அ) குறில் கீழ் கடை**

**10. பாடல் (தொழிற்பெயர் விகுதியை எழுதுக)**

அ) அல் ஆ) தல் இ) ல் ஈ) ஆடு

**விடை அ) அல்**

## இலக்கணக் குறிப்பு தருக.

**1. கொல்லாமை**

அ) தொழிற்பெயர் ஆ) வினையாலணையும் பெயர்
இ) எதிர்மறைத் தொழிற்பெயர் ஈ) முதனிலைத் தொழிற்பெயர்

**விடை இ) எதிர்மறைத் தொழிற்பெயர்**

**2. ஓஒதல்**

அ) இன்னிசை அளபெடை ஆ) இசைநிறை அளபெடை
இ) சொல்லிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை

**விடை ஆ) இசைநிறை அளபெடை**

**3. பேரரசே**

அ) விளித்தொடர் ஆ) எழுவாய்த்தொடர்
இ) உரிச்சொல் தொடர் ஈ) பெயரெச்சத்தொடர்

**விடை அ) விளித்தொடர்**



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



4. **செந்தமிழ்**

அ) உவமைத்தொகை ஆ) உம்மைத்தொகை
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

**விடை இ) பண்புத்தொகை**

5. **உரனசைஇ**

அ) இசைநிறை அளபெடை ஆ) செய்யுளிசை அளபெடை
இ) சொல்லிசை அளபெடை ஈ) இன்னிசை அளபெடை

**விடை இ) சொல்லிசை அளபெடை**

6. **வெஃ குவார்க்கில்லை** CBSE மார்ச்–20

அ) செய்யுளிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை
இ) ஒற்றளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

**விடை இ) ஒற்றளபெடை**

7. **பலகை**

அ) தனிமொழி ஆ) பொதுமொழி
இ) தொடர்மொழி ஈ) எதுவுமில்லை

**விடை ஆ) பொதுமொழி**

8. **மாடு புல் தின்றது**

அ) தொடர்மொழி ஆ) பொதுமொழி
இ) தனிமொழி ஈ) எதுவுமில்லை

**விடை அ) தொடர்மொழி**

9. **அந்தமான்** CBSE மார்ச்–20

அ) தனிமொழி ஆ) பொதுமொழி
இ) தொடர்மொழி ஈ) எதுவுமில்லை

**விடை ஆ) பொதுமொழி**

10. **எங்ங்கிறைவன்**

அ) ஆய்தம் ஆ) ஒற்றளபெடை
இ) உயிரளபெடை ஈ) ஆய்தக்குறுக்கம்

**விடை ஆ) ஒற்றளபடை**

11. **வெட்டு**

அ) முதனிலைத் தொழிற்பெயர் ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்
இ) விகுதிபெற்ற தொழிற்பெயர் ஈ) பகுதி

**விடை அ) முதனிலைத் தொழிற்பெயர்**

## சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க.

1. அ) இசைநிறை அளபெடை செய்யுளிசை அளபெடையின் வேறு பெயராகும்.
ஆ) இசைநிறை அளபெடை ஒற்றளபெடையின் வேறு பெயராகும்.
இ) இசைநிறை அளபெடை இன்னிசை அளபெடையின் வேறு பெயராகும்.
ஈ) இசைநிறை அளபெடை சொல்லிசை அளபெடையின் வேறு பெயராகும்.

**விடை அ) இசைநிறை அளபெடை செய்யுளிசை அளபெடையின் வேறு பெயராகும்.**

2. அ) செய்யுளில் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்ய நெட்டெழுத்துக்கள் அளபெடுத்தல் இன்னிசை அளபெடை ஆகும்.
ஆ) செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்,
இ) செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும்.
ஈ) செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது செய்யுளிசை அளபெடை ஆகும்.

**விடை ஆ) செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.**

3. அ) கண்ணன் என்பது தொடர்மொழி.
ஆ) கண்ணன் என்பது தனிமொழி
இ) கண்ணன் என்பது பொது மொழி
ஈ) கண்ணன் என்பது செம்மொழி

**விடை ஆ) கண்ணன் என்பது தனிமொழி**



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



## குறுவினா

1. **அளபெடுத்தல் என்றால் என்ன? அது எதற்குப் பயன்படுகிறது?**
   (i) அளபெடுத்தல் – நீண்டு ஒலித்தல்.
   (ii) பேச்சு வழக்கில் சொற்களை நீட்டி ஒலித்துப் பேசும்போது உணர்வுக்கும் இனிய ஓசைக்கும் அளபெடுத்தல் பயன்படுகிறது.

2. **சார்பெழுத்து எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   சார்பெழுத்து பத்து வகைப்படும். அவை உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம்.

3. **அளபெடை என்றால் என்ன?**
   நெடில் எழுத்துகள் நீண்டு ஒலிக்கும். அவ்வாறு அளபெடுக்கும் போது அதற்கு இனமான குறில் எழுத்துகள் அதன் பக்கத்தில் வரும். அளபு + எடை = அளபெடை (அளபு – மாத்திரை, எடை – எடுத்தல்).

4. **அளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   அளபெடை இரண்டு வகைப்படும். அவை, (i) உயிரளபெடை, (ii) ஒற்றளபெடை.

5. **உயிரளபெடை என்றால் என்ன?**
   (i) செய்யுளில் ஓசை குறையும்போது அவ்வோசையை நிறைவுசெய்ய உயிர் நெடில் எழுத்துகள் ஏழும் நீண்டு ஒலிப்பது உயிரளபெடை எனப்படும்.
   (ii) உயிர்நெடில் அளபெடுக்கும்போது அவற்றுக்கு இனமான குறில் எழுத்துகள் அதன் பக்கத்தில் வரும்.

6. **உயிரளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   **உயிரளபெடை மூன்று வகைப்படும். அவை**
   (i) செய்யுளிசை அளபெடை (அ) இசைநிறை அளபெடை
   (ii) இன்னிசை அளபெடை
   (iii) சொல்லிசை அளபெடை

7. **இன்னிசை அளபெடை என்றால் என்ன?**
   செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாகி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.
   **சான்று :** கெடுப்பதூஉம் , எடுப்பதூஉம்

8. **செய்யுளிசை அளபெடை என்றால் என்ன?**
   செய்யுளில் ஓசை குறையும்போது அவ்வோசையை நிறைவு செய்ய உயிர் நெடில் எழுத்துகள் ஏழும் நீண்டு ஒலிப்பது செய்யுளிசை அளபெடை எனப்படும். இதனை இசைநிறை அளபெடை என்றும் கூறுவர்.
   **சான்று :** ஓஒதல் வேண்டும் – மொழி முதல்
   ஊறாஅர்க்கு உறுநோய் – மொழியிடை
   நல்ல படாஅ பறை – மொழியிறுதி

9. **சொல்லிசை அளபெடை என்றால் என்ன?**
   செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் வினையெச்சப் பொருள்தரும் பொருட்டு அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும்.
   **சான்று :** குடிதழீஇ, அடிதழீஇ (தழீ – தழுவுதல், தழீஇ – தழுவி)

10. **ஒற்றளபெடை என்றால் என்ன?**
    செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய மெய்யெழுத்துகள் அளபெடுப்பது ஒற்றளபெடை ஆகும்.
    **சான்று :** எஃஃ கிலங்கிய கையராய் இன்னுயிர்
    வெஃஃ குவார்க்கில்லை வீடு.

11. **அளபெடுக்கும் ஒற்றெழுத்துகள் யாவை?**
    **அளபெடுக்கும் ஒற்றெழுத்துகளாவன:**
    **மெய்யெழுத்துகள்:** ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள்
    **ஆய்த எழுத்து :** ஃ



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**12. சொல் என்றால் என்ன?**

ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தருவது சொல் ஆகும்.

**13. மொழியின் வகைகள் யாவை?**

மொழி மூன்று வகைப்படும். (i) தனிமொழி (ii) தொடர்மொழி (iii) பொதுமொழி

**14. தொடர்மொழி என்றால் என்ன?**

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர்மொழி ஆகும்.

**சான்று :** கண்ணன் வந்தான்.

**15. பொதுமொழி என்றால் என்ன?**

ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது பொதுமொழி எனப்படும்.

**சான்று :** தாமரை
தாமரை – மலர்
தா + மரை – தாவுகின்ற மான்

**16. முதனிலைத் தொழிற்பெயர் என்றால் என்ன?**

(i) தொழிற்பெயர் விகுதி பெறாமல் வினைப்பகுதியே தொழிற்பெயராதல் முதனிலைத் தொழிற்பெயராகும்.
(ii) எ.கா : தட்டு, உரை, இச்சொற்கள் தட்டுதல், உரைத்தல் என்று பொருள்படும்போது முதனிலைத் தொழிற்பெயர்களாகின்றன.

**17. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன?**

(i) தொழிற்பெயரின் விகுதியைப் பெறாமல் முதனிலை திரிந்து (மாறுபட்டு) வருவது முதனிலை திரிந்த தொழிற்பெயர் ஆகும்.
(ii) **சான்று:** கெடுவான் கேடு நினைப்பான்
(iii) இதில் 'கெடு' என்னும் முதனிலை 'கேடு' என்று மாறி வந்துள்ளமையால் இது முதனிலை திரிந்த தொழிற்பெயராகும்.

**18. வினையாலணையும் பெயர் என்றால் என்ன?**

ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது வினையாலணையும் பெயர் எனப்படும். அது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் மூன்று காலங்களிலும் வரும்.

**சான்று :** வந்தவர் அவர்தான்.
பொறுத்தார் பூமியாள்வார்.

☆ ☆ ☆

## திறன் அறிவோம்

**பலவுள் தெரிக.**

**1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது–**

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

**விடை அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்**

**2. காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள், இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது –**

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

**விடை ஈ) சருகும் சண்டும்**

**3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்**

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

**விடை இ) எம் + தமிழ் + நா**

**4. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே –**

அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய
இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

**விடை ஈ) பாடல்; கேட்டவர்**



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



5. **வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை**
அ) குலை வகை ஆ) மணி வகை
இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

**விடை** **ஆ) மணி வகை**

## குறுவினா

1. **'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.**
(i) வேங்கை என்பது தனிமொழியாகி மரத்தையும், புலியையும் குறிக்கும்.
(ii) வேம் + கை எனத் தொடர்மொழியாகப் பிரிந்து 'வேகின்ற கை' எனப் பொருள் தரும்.
(iii) இது தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவதால் பொதுமொழியாக இருக்கிறது.

2. **'மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!' - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**
(i) சீவகசிந்தாமணி
(ii) வளையாபதி
(iii) குண்டலகேசி.

3. **ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.**
**மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.**
**சரியான தொடர்கள் :**
(i) ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
(ii) ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
**பிழையான தொடர் :** ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
**பிழைக்கான காரணம் :** தாறு என்பது வாழைக்குலையைக் குறிக்கும். சீப்பு என்பது அதில் அடங்கிய வரிசையான பழங்கள் ஆகும்.

4. **'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்**
**வடுக்காண் வற்றாகும் கீழ்' - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.**
(i) உடுப்பதூஉம், உண்பதூஉம் - இன்னிசை அளபெடை வகையைச் சார்ந்தது ஆகும்.
(ii) **இலக்கணம் :** செய்யுளின் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

5. **தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.**
ஒரு சொல்லோ, சொற்றொடரோ இரு பொருள்பட வருவது இரட்டுற மொழிதல் அணி எனப்படும்.இதனைச் 'சிலேடை அணி' என்றும் அழைப்பர். தற்கால உரைநடையிலும் மேடைப்பேச்சிலும் சிலேடைகள் பயன்படுத்தப்படுகின்றன. **எ.கா:** சென்னை வரவேற்கிறது என்பதை, சென்னை வர வேர்க்கிறது (வியர்க்கிறது என்பதன் பேச்சு வழக்கு) என்று சிலேடை மூலம் பகடியாகச் சொல்லலாம்.

## சிறுவினா

1. **தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?** CBSE மார்ச்–20
**தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்கள் :**
(i) தமிழ்மொழி பழமைக்குப் பழமையாய் உள்ளது.
(ii) கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து ஆட்சி செய்தது.
(iii) பாண்டிய மன்னனின் மகளாக வளர்ந்தது.
(iv) திருக்குறளின் பெருமைக்கு உரியதாய் விளங்குகிறது.
(v) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாக அமைந்துள்ளது.
(vi) நிலைத்து நிற்கும் சிலப்பதிகாரமாகவும், அழகான மணிமேகலையாகவும் விளங்குகிறது.



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**2.** **'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'**

**இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.**

(i) கண்ணன் வயலில் **நெல் நாற்றிற்குத்** தண்ணீர் பாய்ச்சினான்.

(ii) தாத்தா நிறைய **தென்னம்பிள்ளை**களை வாங்கி வந்தார்.

(iii) **கத்தரி நாற்றில்** வெட்டுக்கிளிகள் இருந்தன.

(iv) **மாங்கன்று** மழைக்குப் பிறகு தளிர் விட்டுள்ளது.

(v) வாழைமரத்தினடியில் **வாழைக்கன்றுகள்** உள்ளன.

**3.** **'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது' இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும். இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.**

| வினைமுற்று | தொழிற்பெயர் | வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|---|---|
| அறிந்தது | அறிதல் | தெரிந்தது | தெரிதல் |
| அறியாதது | அறியாமை | தெரியாதது | தெரியாமை |
| புரிந்தது | புரிதல் | பிறந்தது | பிறத்தல் |
| புரியாதது | புரியாமை | பிறவாதது | பிறவாமை |

**4.** **தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.**

| பாடல் அடிகள் | தமிழ் | கடல் |
|---|---|---|
| முத்தமிழ் | இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழாய் விளங்குகிறது. | முத்தினை அமிழ்ந்து எடுத்தல். |
| முச்சங்கம் | முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. | வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது. |
| மெத்தவணிகலன் (மெத்த + அணிகலன்) | ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றுள்ளது. | மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது. |
| சங்கத்தவர் காக்க | சங்கப் பலகையிலிருந்து சங்கப் புலவர்கள் பாதுகாத்தமை. | நீரலையைத் தடுத்து நிறுத்தி சங்கினைக் காத்தல். |

## நெடுவினா

**1.** **மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.**

அனைவருக்கும் வணக்கம்!

தமிழ்த்தாய் இன்று நேற்று பிறந்தவள் இல்லை. அவளுடைய புகழைப் பாடப் பாட இனிமை பிறக்கும். தமிழ்த்தாயைப் போற்றாத புலவரில்லை என்றால் அது மிகையாகாது.

மனோன்மணீயம் பெ.சுந்தரனார் அவர்களும் பெருஞ்சித்திரனார் அவர்களும் தமிழ்த்தாயை வாழ்த்தியமையைப் பார்ப்போம்.

பெ. சுந்தரனார் அலைகடலை ஆடையாக அணிந்த பூமிப் பெண்ணிற்குப் பாரத கண்டம், முகமாகத் திகழ்வதாகக் கூறுகிறார். அம்முகத்திற்குத் தென்திசை நாடுகள் பிறைநிலவு போன்ற நெற்றியாகவும் அந்நெற்றியில் நறுமணம் மிக்க திலகமாய்த் தமிழகம் உள்ளதாய்க் கூறியுள்ளார். அதுமட்டுமல்லாமல் திலகத்தின் மணம் எல்லோரையும் இன்புறச் செய்வதுபோல் தமிழ்த்தாயும் எல்லாத் திசைகளிலும் புகழ்பெற்றவளாக இருப்பதாகக் கூறியுள்ளார்.

பெருஞ்சித்திரனார் தமிழைப் பழமைக்குப் பழமையாய்த் தோன்றியவள், குமரிக்கண்டத்தில் நிலைத்து நின்று அரசாளும் மண்ணுலகப் பேரரசு, பாண்டிய மன்னனின் மகள் என்றெல்லாம் குறிப்பிடுகிறார். பெ.சுந்தரனார் தமிழ்த்தாய் எல்லாத் திசைகளிலும் புகழ்பெற்றுத் திகழ்வதாகக் கூறியுள்ளார். அதனையே பெருஞ்சித்திரனார் திருக்குறளின் பெருமைக்குரியவளாகவும் பதினெண் மேல்கணக்கு, கீழ்க்கணக்கு, ஐம்பெருங்காப்பியங்களாய் எல்லாத் திசையிலும் பரவியுள்ளாள் என்று புகழ்ந்து கூறியுள்ளார். பொங்கியெழும் இந்நினைவுகளால் தலை பணிந்து வாழ்த்துகின்றோம் என்கிறார்.

உலகின் மூத்தமொழியாக இருந்தும் இன்றளவும் இளமையாக இருக்கின்றாள் என்று சுந்தரனார் பாடுகிறார். பெருஞ்சித்திரனார் இதனைப் பழமைக்குப் பழமை என்கிறார்.



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



சுந்தரனார் தமிழ்மொழியின் வளம் பெருகுகின்றதே தவிர குறையவில்லை என்கிறார். இதனைப் பெருஞ்சித்திரனார் தமிழ் பழம்பெருமையும் தனக்கெனத் தனிச் சிறப்பும் இலக்கிய வளமும் கொண்டுள்ளது என்கிறார். மேலும் "வியக்கத்தக்க நீண்ட உன் நிலைத்த தன்மையும் வேற்று மொழியார் உன்னைப் பற்றி உரைத்த புகழுரையும் எமக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன" என்கிறார்.

'சுந்தரனார் தமிழே! தமிழாகிய பெண்ணே! தாயே உன்னை வாழ்த்துகிறேன்' என்கிறார். பெருஞ்சித்திரனார், "எம் தனித்தமிழே! உள்ளத்தில் கனல் மூள, வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று நாங்கள் உன்னைச் சுவைத்து உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்" என்று பாடியுள்ளார்.

இவ்வாறு மனோன்மணீயம் பெ. சுந்தரனார் அவர்களும் பெருஞ்சித்திரனார் அவர்களும் தமிழின் பெருமையைப் பறைசாற்றி வாழ்த்துகின்றனர்.

**2. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.**

வணக்கம்!

**சொல்வளம் :**

**(i)** தமிழ்நாட்டுப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையவர்கள். எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும், நூலிலும் இலையைக் குறிக்க Leaf என ஒரே சொல் மட்டுமே உள்ளது.

**(ii)** ஆனால் தமிழ் மொழியில் அதன் வன்மை, மென்மையின் அடிப்படையில் தாள், இலை, தோகை, ஓலை எனத் தமிழர் பாகுபாடு செய்துள்ளனர்.

**(iii)** தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ள ஒரு பொருட் பலசொல் வரிசைகள் பிறமொழிகளில் இல்லை.

**(iv)** தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன என்கிறார் கால்டுவெல்.

**சொல்லாக்கத்திற்கான தேவை :**

**(i)** திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும்.

**(ii)** பொருளைக் கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு சொற்களும் நுண்பொருட் சொற்களும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

**(iii)** அறிவியல் வளர்ச்சியினால் ஏற்பட்ட புதிய சொற்களுக்கான கலைச்சொல் வளத்தைப் பறை சாற்றுதல் அவசியமாகும்.

**(iv)** தமிழின் பெருமையும் மொழியின் சிறப்பும் குன்றாமல் இருக்கவும், தமிழுக்குச் சிறந்த எதிர்காலம் வேண்டுமாயின் புதிய சொல்லாக்கம் தேவை.

**(v)** பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்தால் தமிழின் இனிமை குறையும். அத்துடன் தமிழ்ச் சொற்கள் நாளடைவில் மறைந்து அயல்மொழிச் சொற்களே நிலைபெற்றிட வாய்ப்புகள் உள்ளன. இத்தகைய நிலை ஏற்படாதிருக்க தமிழில் புதிய கலைச்சொற்களை உருவாக்க வேண்டும்.

**(vi)** நாம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் கருவிகள், வேளாண்மை, மருத்துவம், பொறியியல், தகவல் தொடர்பியல் முதலான துறைகளுக்குப் பயன்படும் சொற்களைத் தமிழில் சொல்லாக்கம் செய்து நம் மொழியின் வளத்தைப் பெருக்க வேண்டும்.

நன்றி!

**3. ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.**

**சூழல் – வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.**

**உறவினர் மகள்**

**(மாலா)** : (ஆங்கிலச் செய்தித்தாள் படித்துக் கொண்டிருக்கிறாள்.)

**செந்தமிழ் செல்வி** : என்ன மாலா! தமிழ்ச் செய்தித்தாள் படிக்கின்றாயா?

**மாலா** : செய்தித்தாள்தான். ஆனால் தமிழ் இல்லை. ஆங்கிலம்தான்.

**செந்தமிழ் செல்வி** : ஏன் தமிழ் படிக்கத் தெரியாதா?



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**மாலா** : இல்லை. தமிழ் நன்றாகப் பேசுவேன். படிக்கத் தெரியாது. எனக்குத் தமிழ் நூல்கள் படிக்க விருப்பம்தான்.

**செந்தமிழ் செல்வி** : தமிழ் மிகவும் எளிமையான மொழி. அம்மொழியைப் பேசுவது எவ்வளவு எளிமையோ படிப்பதும் அவ்வளவு எளிமைதான்.

**மாலா** : அப்படியா?

**செந்தமிழ் செல்வி** : தமிழ் உரைநடைக்குக் கருத்துகள் தெரிந்தால் அவற்றை எளிதில் எழுதவும் முடியும். வாக்கியமமைப்பு திணை, பால், எண், இடம், காலம் பொருந்தியும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் சரியாக அமைந்தால் போதும்.

**மாலா** : உரைநடை என்கிறாயே அது என்ன?

**செந்தமிழ் செல்வி** : செய்யுள் என்பவை எதுகை, மோனை, இயைபு, அணி என்று பல நயங்களால் அழகுப்படுத்தப்பட்டிருக்கும். உரைநடை அவ்வாறு இல்லை. உரைநடை என்பது தொல்காப்பியர் காலத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

**மாலா** : அப்படியா?

**செந்தமிழ் செல்வி** : இறையனார் களவியல் உரை, இளங்கோவடிகள் உரை என வளர்ந்து வந்துள்ளது. திரு.வி.க, மு.வ., அண்ணா போன்றோர் இருபதாம் நூற்றாண்டில் உரைநடை வளர்ச்சிக்குக் காரணமாக இருந்துள்ளனர்.

**மாலா** : உரைநடை வடிவில் வரும் இலக்கியங்கள் யாவை?

**செந்தமிழ் செல்வி** : சிறுகதை, புதினம், புராணக் கதைகள் இவையெல்லாம் உரைநடையே. உரைநடை வளர்ந்ததால் நாம் பிறமொழி நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து பாரதியின் அவாவை நிறைவேற்றியுள்ளோம்.

**மாலா** : வீரமாமுனிவர், ஜி.யூ.போப் போன்ற சான்றோர்களும் இப்பணியைச் செவ்வனே ஆற்றியுள்ளார்கள் அல்லவா?

**செந்தமிழ் செல்வி** : சரியாகச் சொன்னாய். கால்டுவெல் தமிழுக்கு ஆற்றிய பணிகள் ஏராளம். இவர் தமிழ்மொழியின் சிறப்பைத் தமிழருக்குக் கூறியவர். இதுபோல சான்றோர்கள் பலர் மூலம் உரைநடை வளர்ந்துள்ளது. உரைநடை வளர்ந்து வருவதால்தான் தமிழ் இலக்கியங்களைப் பிறர் அறிய முடிகிறது.

**மாலா** : தமிழ்மொழியை அறியாதவர்களால் தமிழைப் படித்து நூல்கள் இயற்றும்போது எனக்குத் தமிழ் பேசத் தெரியும். கற்பது என்ன கடினமா? இன்றே எனக்கு தமிழ் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொடு.

☆ ☆ ☆



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



# அலகுத் தேர்வு

**கால அளவு : 1.30 மணி** **மதிப்பெண்கள் : 40**

**I.** **பின்வரும் பகுதியைப் படித்து, கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.** (5 × 1 = 5)

கலைகளுள் பயன்பாட்டு நிலையில் முதன்மை பெறுவது மருத்துவமனைகளும் இன்றைய நிலையில் இன்றியமையாதன ஆகிவிட்டன. போரில்லாத காலம் இருக்கலாம். பஞ்சமில்லாத காலம் இருக்கலாம். ஆனால் நோயில்லாத சமுதாயமே இல்லை. ஆதலால் நோயைப் போக்கும் மருத்துவர்கள் எல்லாக் காலத்திலும் இன்றியமையாதவர்களாக இருக்கிறார்கள் என்ற கி.வா.ஜ. அவர்களின் கூற்று மருத்துவத்தின் இன்றியமையாத் தன்மையைப் புலப்படுத்தும். இத்தகைய சமுதாயத் தேவையை முதன் முதலில் ஒரு தொகுப்பாகப் பாடிய பெருமை திருவள்ளுவரையே சாரும். திருவள்ளுவர் பொருட்பாலில் மருந்து என்னும் அதிகாரத்தில் மருத்துவநெறி குறித்துக் கூறியுள்ளார். பெருமளவிலான நோய்கள் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணம் நமது உணவுப் பழக்கங்களே, உண்ணல், உறங்கல் முதலியவற்றை மிகுதியாகவும், குறைவாகவும் செய்யின் வாதம் முதலிய கூறுகள் மிகுந்தும் குறைந்தும் உடலுக்கு நோய் செய்யும் என்று திருவள்ளுவர் உணர்த்துகிறார். சங்க காலத்தில் கடுகு பெருந்தேவனார், போந்தைப் பசலையார், வெள்ளெருக்கிலையார், காவட்டனார் போன்றோ மருத்துவப்புலவர்களாக இருந்துள்ளனர்.

**வினாக்கள்:**

1. பயன்பாட்டு நிலையில் முதன்மை பெறும் கலை எது?
   அ) சிற்பக்கலை ஆ) மருத்துவக்கலை இ) ஓவியக்கலை ஈ) கட்டிடக்கலை
2. எது இல்லாத சமுதாயமே இல்லை?
   அ) நோய் ஆ) வறுமை இ) போர் ஈ) ஆடம்பரம்
3. "மருத்துவர்கள் எல்லாக்காலத்திலும் இன்றியமையாதவர்களாக இருக்கின்றனர்" என்று கூறியவர் யார்?
   அ) ம. பொ. சி ஆ) கு.ப.ரா. இ) கி. வா. ஜ ஈ) வ. உ. சி
4. நோய்கள் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணம் எது?
   அ) உடற்பயிற்சி ஆ) யோகா இ) உணவுப்பழக்கம் ஈ) தூக்கம்
5. மருத்துவப்புலவர்களின் பெயரில் அமைந்துள்ள பொருள் யாது?
   அ) காரப் பொருள் ஆ) மருந்துப் பொருள் இ) ஊர்ப் பெயர் ஈ) குடிப்பெயர்

**II.** **சான்று தருக (ஏதேனும் ஒன்று).** (1 × 1 = 1)

1. **இன்னிசை அளபெடை**
   அ) உரனசைஇ ஆ) கெடுப்பதூஉம் இ) உறாஅர்க்கு ஈ) தொழாஅர்
2. **எதிர்மறைத் தொழிற்பெயர்**
   அ) நடத்தல் ஆ) நடவாமை இ) நடந்து ஈ) நடந்த

**III.** **கூறியவாறு செய்க (ஏதேனும் ஒன்று).** (1 × 1 = 1)

1. படா - **(செய்யுளிசை அளபெடையாக்குக)**
   அ) படாட ஆ) படாஅ இ) படாடா ஈ) பஅடா
2. **அடித்தல் - (வேர்ச்சொல் தருக)**
   அ) அடித்த ஆ) அடி இ) அடித்து ஈ) அடிப்பது

**IV.** **இலக்கணக்குறிப்பு தருக (ஏதேனும் ஒன்று).** (1 × 1 = 1)

1. **வஃ குவார்க்கில்லை**
   அ) செய்யுளிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை
   இ) ஒற்றளபெடை ஈ) சொல்லிசை அளபெடை
2. **மாடு புல் தின்றது**
   அ) தொடர்மொழி ஆ) பொதுமொழி இ) தனிமொழி ஈ) எதுவுமில்லை

**V.** **பின்வரும் செய்யுட் பகுதியைப்படித்து அதனைத் தொடர்ந்துவரும் பல்விடை வினாக்களுக்கு உரியவிடைகளை எழுதுக.** (5 × 1 = 5)

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் – நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு.



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



1. **இப்பாடல் இடம்பெற்ற நூல் .............. .**
அ) புறத்திரட்டு ஆ) தனிப்பாடல் திரட்டு இ) நல்வழி ஈ) மூதுரை

2. **இந்நூலின் ஆசிரியர் .............. .**
அ) தமிழழகனார் ஆ) இளங்குமரனார் இ) பெருஞ்சித்திரனார் ஈ) நக்கீரர்

3. **சங்கப்பலகை – பிரித்து எழுதுக.**
அ) சங்க + பலகை ஆ) சங்கம் + பலகை இ) சங்கு + பலகை ஈ) சங்கப் + பலகை

4. **ஆழி – பொருள் தருக.**
அ) ஆழம் ஆ) முத்து இ) கடல் ஈ) கப்பல்

5. **காக்க – இலக்கணக்குறிப்பு தருக.**
அ) வினைத்தொகை ஆ) வியங்கோள் வினைமுற்று
இ) வினையெச்சம் ஈ) வினைச்சொல்

**VI. பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள்தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.** (5 × 1 = 5)

1. ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையவர். எத்துணையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும் எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க Leaf என ஒரே சொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப்பொதுமக்களைப் போல வன்மை மென்மைப்பற்றி தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை.

**வினாக்கள்.**

1. **மொழி யாரால் அமையப்பெறும்?**
அ) பொதுமக்கள் ஆ) அரசியலாளர்கள் இ) மாணவர்கள் ஈ) சான்றோர்கள்

2. **தமிழ்ப் பொதுமக்கள் எத்தகையவர்?**
அ) உயர்ந்த புகழுடையவர் ஆ) உயர்ந்த குணமுடையவர்
இ) உயர்ந்த பகுத்தறிவுடையவர் ஈ) உயர்ந்த செல்வாக்குடையவர்

3. **பல மொழிகளினின்று கடன் கொண்ட மொழி எது?**
அ) கிரேக்கம் ஆ) தமிழ் இ) ஆங்கிலம் ஈ) ஈப்ரு

4. **ஆங்கில மொழியில் உள்ள leaf எதனைக் குறிக்கிறது?**
அ) பூ ஆ) காய் இ) கனி ஈ) இலை

5. **தமிழ்ப் பொதுமக்கள் இலைகளை எதன் அடிப்படையில் பாகுபாடு செய்தனர்?**
அ) அளவு ஆ) நிறம் இ) வன்மை மென்மை ஈ) செடி,கொடி

**VII. பின்வரும் செய்யுள் வினாக்களுக்குச் சுருக்கமான விடையளி. (ஏதேனும் ஒன்று)** (1 × 4 = 4)

1. **தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?**
2. **தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.**

**VIII. பின்வரும் உரைநடை வினாக்களுக்குச் விரிவான விடையளி. (ஏதேனும் ஒன்று)** (1 × 5 = 5)

1. **கெட்டுப்போன காய்களுக்கு வழங்கும் சொற்களை எழுதுக.**
2. **பாவாணர் கட்டுரையில் கையாண்டுள்ள தமிழ்ச் சொல் வளங்களை விளக்குக.**

**IX. ஒரு பக்க அளவில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக.** (1 × 7 = 7)

1. **ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.**
**சூழல் – வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.**

**X. பின்வருவனவற்றுள் பகுதியின் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

1. **முன்னுரை – தமிழகம் தந்த தவப்புதல்வர் – நாட்டுப் பற்று – மொழிப்பற்று – பொதுவாழ்வில் தூய்மை – எளிமை – மக்கள் பணியே மகத்தான பணி .** (1 × 6 = 6)

☆ ☆ ☆



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



பண்பாடு - கூட்டாஞ்சோறு | உரைநடை உலகம்

# இயல் 3 விருந்து போற்றுதும்!

**பாடச் சுருக்கம்**



**விருந்தோம்பல் - விளக்கம் :**

தம் வீட்டுக்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவது 'விருந்தோம்பல்' ஆகும்.

**விருந்தினர் - விளக்கம் :**

முன்பின் அறியாத புதியவர்களே 'விருந்தினர்' எனப்படுகின்றனர். '**விருந்தே புதுமை**' என்ற தொல்காப்பியரின் கூற்றே இதற்குச் சான்றாகும்.

## விருந்தோம்பல் குறித்த இலக்கியச் சான்றுகள்

**திருக்குறள் :** இல்லறவியலில் '**விருந்தோம்பல்**' என்ற ஓர் அதிகாரத்தை அமைத்து, இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். முகம் மாறுபாடு அடையாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை "**மோப்பக் குழையும் அனிச்சம்**" என்ற குறளில் கூறியுள்ளார்.

**சிலப்பதிகாரம் :** கோவலனைப் பிரிந்து வாழ்வதை விட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணி கண்ணகி வருந்துவதாக,

"...................... தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"

என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார்.

**கம்பராமாயணம் :**

"பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்து அன்றி விளைவன யாவையே." **- கம்பர்**

**பொருள் :** கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்கிறார்கள்.

**கலிங்கத்துப்பரணி :**

"விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போல" **- செயங்கொண்டார்**

**பொருள் :** விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சி இங்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

**புறநானூறு (182 ஆவது பாடல்) :**

"உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே..." **- கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி**

**பொருள் :** அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர்; அத்தகையோரால்தான் உலகம் நிலைத்திருக்கிறது. இப்பாடல் மூலம் தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படையான 'தனித்து உண்ணாமை' விளக்கப்பட்டுள்ளது.

**நற்றிணை (142 ஆவது பாடல்) :**

"அல்லில் ஆயினும் விருந்து வரின்
உவக்கும்." - இடைக்காடனார்

**பொருள் :** நடுஇரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு.



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**புறநானூறு (333 -ஆவது பாடல்) :**

"குரல்உணங்கு விதைத் தினை உரல்வாய்ப் பெய்து
சிறிது புறப்பட்டன்றோ இலள்." – ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை

**பொருள் :** தானியம் ஏதும் இல்லாத நிலையில், விதைக்காக வைத்திருந்த தினையை உரலில இட்டு, குத்தியெடுத்து விருந்தினருக்கு உணவளித்தாள் குடும்பத் தலைவி.

**புறநானூறு (316 -ஆவது பாடல்) :**

"நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்றுஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்." – மதுரை கள்ளிற்கடையத்தன் வெண்ணாகனார்

**பொருள் :** நேற்று வந்த விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் இரும்பால் ஆன பழைய வாளை அடகு வைத்த தலைவன், இன்று வந்த விருந்தினரைப் பேணுவதற்குத் தன்னுடைய கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான்.

**பெரியபுராணம் :** வீட்டிற்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க தானியம் இல்லாததால், இளையான்குடி மாறநாயனார் அன்று விதைத்து விட்டு வந்த நெல்லை அரித்து வந்து சமைத்து, விருந்து படைத்தார் என்று பெரிய புராணத்தில் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார்.

**சிறுபாணாற்றுப்படை :**

நெய்தல் நிலத்தவர், பாணர்களை வரவேற்று, குழல்மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் எனச் சிறுபாணாற்றுப்படையில் நல்லூர் நத்தத்தனார் குறிப்பிட்டுள்ளார்.

**பொருநராற்றுப்படை :**

"காலின் ஏழடிப் பின்சென்று" – முடத்தாமக்கண்ணியார்

**பொருள் :** வீட்டிற்கு வந்த விருந்தினர் திரும்பிச் செல்லும்போது, அவர்கள் செல்லவிருக்கும் நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர்வரை ஏழு அடி நடந்து சென்று பண்டைத் தமிழர்கள் வழியனுப்பினர்.

**குறுந்தொகை (118 -ஆவது பாடல்) :**

"பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீ ரோ." – நன்னாகையார்

**பொருள் :** இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், "உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா?" என்று கேட்கும் வழக்கம் இருந்தது.

**ஔவையார் பாடல் (கொன்றை வேந்தன்) :** "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்."

**ஔவையார் பாடல் (தனிப் பாடல்) :**

"வரகரசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரெனவே புளித்த மோரும் – திறமுடனே
புள்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந்து இட்டானஈ(து)
எல்லா உலகும் பெறும்."

**பொருள் :** புள்வேளூர் பூதன் என்பவர் ஔவையாருக்கு அளித்த வரகரசிச்சோறு, கத்தரிக்காய் வதக்கல், அளவாகப் புளித்த மோர் ஆகியவற்றுக்கு ஈடாக இந்த உலகையே தரலாம் என்று பாடியுள்ளார்.

## விருந்தோம்பல் நிலையின் மாற்றங்கள்

சங்ககாலத்தில் அரசர் முதல் வறியவர் வரை விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கினர். பின்னர் விருந்து புரப்பது குறைந்ததால் நாயக்கர் மற்றும் மராட்டியர் ஆட்சியில் மிகுதியாக சத்திரங்கள் கட்டப்பட்டன.

பண்டைத் தமிழர்கள், புதிதாக வருவோர்களுக்காக வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைத்துப் படுப்பதற்குத் திண்டும் அமைத்திருந்தனர். தற்போது அந்த வழக்கம் இல்லாமல் போய்விட்டது.

காலப்போக்கில் வீட்டில் நடைபெற்ற விழாக்கள் மண்டபங்களுக்கு மாறிவிட்டன. மண்டபங்களிலும் விழா ஏற்பாட்டாளர்களே வரவேற்பது முதல் வழியனுப்பவது வரை செய்வதால் விருந்தோம்பல் பண்பு மாறிவிட்டது.



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



## கூடுதல் வினாக்கள்

**பின்வரும் உரைநடைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

1. திருவள்ளுவர் இல்லறவியலில் 'விருந்தோம்பலை வலியுறுத்த' ஓர் அதிகாரத்தையே அமைத்திருக்கிறார். இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார். முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை 'மோப்பக் குழையும் அனிச்சம்' என்ற குறளில் எடுத்துரைக்கிறார். விருந்தினரைப் போற்றுதல் இல்லறக் கடமையாக இருந்தது.

"................................ தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" – சிலப்பதிகாரம். 16:72, 73

என்று கண்ணகி வருந்துகிறாள். கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி அவனைப் பிரிந்ததைவிட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணியே வருந்துவதாகக் குறிப்பிடுவதன் மூலம் விருந்தினரைப் போற்றிப் பேணல் பழந்தமிழர் மரபு என்பதை இளங்கோவடிகள் உணர்த்துகிறார்.

**வினாக்கள்.**

1. **விருந்தோம்பலை வலியுறுத்தும் திருக்குறள் அதிகாரம் ............... .**

அ) துறவறவியல் ஆ) இல்லறவியல் இ) அரசியல் ஈ) பாயிரவியல்

**விடை ஆ) இல்லறவியல்**

2. **முகர்ந்தவுடன் வாடும் மலர் ............... .**

அ) மல்லி ஆ) முல்லை இ) அனிச்சம் ஈ) ஆவாரம்பூ

**விடை இ) அனிச்சம்**

3. **இல்லறக் கடமை ............... ஆகும்.**

அ) நண்பர்களைப் போற்றுதல் ஆ) பகைவர்களைப் போற்றுதல்
இ) விருந்தினரைப் போற்றுதல் ஈ) சகோதரர்களைப் போற்றுதல்

**விடை இ) விருந்தினரைப் போற்றுதல்**

4. **விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணி வருந்தியவள் ............... .**

அ) மாதவி ஆ) கண்ணகி இ) மணிமேகலை ஈ) ஆதிரை

**விடை ஆ) கண்ணகி**

5. **விருந்தினரைப் போற்றுதல் பழந்தமிழர் மரபு என்பதை உணர்த்தியவர் ............... .**

அ) திருவள்ளுவர் ஆ) கம்பர் இ) ஔவையார் ஈ) இளங்கோவடிகள்

**விடை ஈ) இளங்கோவடிகள்**

2. தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர். அத்தகையோரால்தான் உலகம் நிலைத்திருக்கிறது என்பதை,

"உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும், இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே ......" – புறநானூறு, 182

என்று கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி குறிப்பிட்டுள்ளார்.

விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு. இதை

"அல்லில் ஆயினும் விருந்து வரின்
உவக்கும்" என்று நற்றினை (142) குறிப்பிடுகிறது.

**வினாக்கள்.**

1. **தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை ............... .**

அ) சேர்ந்து உண்ணாமை ஆ) தனித்து உண்ணாமை
இ) மறைந்து உண்ணாமை ஈ) கொடுத்து உண்ணாமை

**விடை ஆ) தனித்து உண்ணாமை**



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**2.** **'உண்டால் அம்ம இவ்வுலகம்' என்று கூறிய நூல் ............... .**

அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) திருக்குறள் ஈ) நற்றிணை

**விடை ஆ) புறநானூறு**

**3.** **அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பவர்களால்தான் உலகம் நிலைத்திருக்கிறது என்று கூறியவர் ............... .**

அ) இளம்பெருவழுதி ஆ) இளங்கோவடிகள்

இ) இளையான்குடி மாறநாயனார் ஈ) இளமாறன் **விடை அ) இளம்பெருவழுதி**

**4.** **அல்லில் ஆயினும் விருந்து வரின்**
**உவக்கும்' என்று கூறிய நூல் ............... .**

அ) திருக்குறள் ஆ) திருவாசகம் இ) நற்றிணை ஈ) குறுந்தொகை

**விடை இ) நற்றிணை**

**5.** **உவக்கும் என்பதன் பொருள் ............... .**

அ) அழும் ஆ) மகிழும் இ) சிரிக்கும் ஈ) சிந்திக்கும் **விடை ஆ) மகிழும்**

### நிரப்புக.

**1.** **"மருந்தே ஆயினும் விருந்தொடு உண்'' என்னும் தொடர் இடம்பெற்ற நூல் ............... .** **விடை கொன்றை வேந்தன்**

**2.** **நறுந்தொகை என்று அழைக்கப்படும் நூல் ............... .** **விடை வெற்றி வேற்கை**

**3.** **திருக்குறளில் 'விருந்தோம்பல்' என்ற அதிகாரம் இடம்பெற்றுள்ள இயல் ............... .** **விடை இல்லறவியல்**

**4.** **"... தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை'' என்ற பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் ............... .** **விடை சிலப்பதிகாரம்**

**5.** **தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை ............... .** **விடை தனித்து உண்ணாமை**

**6.** **தமிழர்கள், அமிழ்தமே கிடைத்தாலும் தனித்து உண்ணாமல், பிறருக்கும் கொடுப்பர் என்று புறநானூறு வழியாகக் கூறியவர் ............... .** **விடை கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி**

**7.** **நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பினைக் கூறும் நூல் ............... .**
**விடை அ) நற்றிணை**

**8.** **"குரல்உணங்கு விதைத் தினை உரல்வாய்ப் பெய்து சிறிது புறப்பட்டன்றோ இலள்'' இப்பாடலடிகளில் இடம்பெற்றுள்ள பண்பு ...............** **விடை இன்மையிலும் விருந்து**

**9.** **இளையான்குடி மாறநாயனாரின் விருந்தோம்பல் சிறப்பினைக் கூறும் நூல் ............... .** **விடை பெரியபுராணம்**

**10.** **"பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்**
**வருவீர் உளீ ரோ'' என்ற பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் ............... .** **விடை குறுந்தொகை**

**11.** **.................. மற்றும் ............... ஆட்சிக் காலங்களில் சத்திரங்கள் அதிகமாகக் கட்டப்பட்டன.**
**விடை நாயக்கர், மராட்டியர்**

### குறுவினா

**1.** **கொடை என்பதும் ஓர் அறம் என்பதனை ஔவையார் எவ்வாறு குறிப்பிடுகிறார்?**

"உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன்" என்று ஔவையார் கூறுகிறார். இதன் மூலம் கொடை என்பதும் ஓர் அறம் என்பதனை அவர் குறிப்பிட்டுள்ளார்.

**2.** **விருந்தோம்பல் என்றால் என்ன? இது குறித்து தொல்காப்பியர் கூறும் விளக்கம் யாது?**

(i) தம் வீட்டுக்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவது விருந்தோம்பல் எனப்படும்.

(ii) முன்பின் அறியாத புதியவர்களே 'விருந்தினர்' எனப்படுகின்றனர். **'விருந்தே புதுமை'** என்ற தொல்காப்பியரின் கூற்றே இதற்குச் சான்றாகும்.

**3.** **சிறுபாணாற்றுப்படை கூறும் விருந்து பற்றி எழுதுக.**

நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்று குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்று சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



4. **“மோப்பக் குழையும் அனிச்சம்” என்ற குறள் கூறும் கருத்து யாது?**
அனிச்ச மலர் முகர்ந்த அளவில் வாடிவிடும், அதுபோல் விருந்தினரை மாறுபட்டு நோக்கும் போது அவர்கள் முகம் வாடிவிடும். எனவே முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்று குறள் கூறுகிறது.

5. **இளங்கோவடிகள் உணர்த்தும் பழந்தமிழர் மரபு யாது?**

“..................... தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை”

என்று கண்ணகி வருந்துகிறாள்.

கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி அவனைப் பிரிந்ததை விட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணியே வருந்துவதாகக் குறிப்பிடுவதன் மூலம் விருந்தினரைப் போற்றிப் பேணல் பழந்தமிழர் மரபு என்பதைச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் உணர்த்துகிறார்.

6. **விருந்தோம்பல் பற்றிக் கம்பரும் செயங்கொண்டாரும் குறிப்பிடுபவை எவை?**
**கம்பர் :** கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்.
**செயங்கொண்டார் :** கலிங்கத்துப்பரணியிலும் செயங்கொண்டார் விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கியுள்ளார்.

7. **பண்டைத் தமிழரின் வழியனுப்பும் முறை பற்றி எழுதுக.**
“காலின் ஏழடிப் பின் சென்று” – **பொருநராற்றுப்படை, 166**
(i) பொருநராற்றுப்படை கூறும் பண்டைத் தமிழர்கள் வீட்டிற்கு வந்த விருந்தினர் திரும்பிச் செல்லும் போது, அவர்களைப் பிரிய மனமின்றி வருந்தினர்.
(ii) மேலும் வழியனுப்பும் பொழுது அவர்கள் செல்லவிருக்கின்ற நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர்வரை ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பினர் என்று பொருநராற்றுப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

8. **குடும்பத் தலைவியின் நல்லியல்பு பற்றி எழுதுக.**
(i) விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.
(ii) நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு. இதனை,
**“அல்லில் ஆயினும் விருந்து வரின்
உவக்கும்”** என்று நற்றிணை குறிப்பிடுகிறது.

9. **சத்திரங்கள் உருவாக்கப்பட்டதன் காரணம் யாது?**
(i) சங்க காலத்திலிருந்தே அரசராயினும் வறியோராயினும் விருந்தினர்களைப் போற்றினர்.
(ii) கால மாற்றத்தில் புதியவர்களாகிய விருந்தினர்களை வீட்டுக்குள் அழைத்து உணவிடுவது குறைந்தது.
(iii) விருந்து புரப்பது குறைந்ததால் சத்திரங்கள் பெருகி நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச் செல்வோர்க்காக கட்டப்பட்டன.

## சிறுவினா

1. **விருந்தை எதிர்கொள்ளும் தன்மை குறித்துக் குறுந்தொகையும் கொன்றைவேந்தனும் பதிவு செய்துள்ள கருத்துகள் யாவை?**
(i) இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் இருந்ததை

“பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீ ரோ.”

என்று குறுந்தொகை(118) அடிகள் புலப்படுத்துகின்றன.
(ii) ‘மருந்தே ஆயினும் விருந்தொடு உண்’ என்ற கொன்றை வேந்தனில் ஔவையார் பாடியுள்ளார். அவர் பாடிய தனிப்பாடல்,

“வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரெனவே புளித்த மோரும் – திறமுடனே
புள்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந்து இட்டான்ஈ(து)
எல்லா உலகும் பெறும்.”

என்று அவர் கூறுவதிலிருந்து வள்ளல்களால் விருந்தினர் போற்றப்பட்டதை அறிய முடிகிறது.



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**2. வாழை இலை விருந்து, உணவு பரிமாறும் முறை குறித்து எழுதுக. (அ) வாழை இலையில் விருந்து என்பது தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று என்பதை விளக்குக.**

(i) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினர்க்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது.

(ii) நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர்.

**தமிழர்களின் உணவு பரிமாறும் முறை :**

(i) உண்பவரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும் வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வரவேண்டும்.

(ii) ஏனென்றால் வலது கையால் உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள் நாம். இலையில் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான அளவில் சிறிய உணவு வகைகளையும் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான அளவில் பெரிய உணவு வகைகளையும் நடுவில் சோறும் வைத்து எடுத்துண்ண வசதியாகப் பரிமாறுவார்கள்.

(iii) உண்பவர் மனமறிந்து அவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளைப் பரிவுடன் பரிமாறுவர்.

**3. இன்மையிலும் விருந்தோம்பல் பற்றி இலக்கியங்கள் கூறுவன யாவை? (அல்லது) ஏழ்மையிலும் விருந்தோம்பிய தமிழர் பண்பாட்டை விவரி.** CBSE மார்ச்–20

நம் முன்னோர், வீட்டிற்கு வந்தவருக்கு வறிய நிலையிலும், எவ்வழியிலேயேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர்.

**புறநானூறு கூறும் செய்திகள் :**

(i) தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி.

"**குரல்உணங்கு விதைத் தினை உரல்வாய்ப் பெய்து
சிறிது புறப்பட்டன்றோ இலள்.**" – என்று புறநானூறு கூறுகிறது.

(ii) நேற்று வந்த விருந்தினரை பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டால் இரும்பினால் செய்த பழைய வாளை அடகு வைத்தான் தலைவன். இன்றும் விருந்தினர் வந்ததால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு, இச்செய்தியைக் கூறும் பாடலடிகள்

"**நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்றுஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்...**"

**பெரியபுராணம் :**

(iii) இளையான்குடி மாறநாயனாரின் வீட்டுக்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க அவரிடம் தானியமில்லை.

(iv) எனவே, அன்று விதைத்துவிட்டு வந்த நெல்லை அரித்து வந்து, பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் கூறப்படுகிறது.

**4. மினசோட்டா தமிழ்ச்சங்கம் கொண்டாடும் "வாழையிலை விருந்து விழா" வைப் பற்றி எழுதுக.**

(i) அமெரிக்காவில் உள்ள மினசோட்டா தமிழ்ச்சங்கம் "வாழையிலை விருந்து விழா"வை ஆண்டுதோறும் அக்டோபர் 26 அன்று கொண்டாடி வருகின்றது.

(ii) தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகளைக் கொண்டு வாழையிலையில் விருந்து வைக்கின்றனர்.

(iii) முருங்கைக் காய் சாம்பார், மோர்க்குழம்பு, வேப்பம்பூ ரசம், வெண்டைக்காய்க் கூட்டு, தினைப் பாயசம், அப்பளம் எனச் சுவையாகத் தமிழர் விருந்து கொடுக்கின்றனர்.

(iv) அங்கு வாழும் தமிழர்கள் பலரும் இந்த விருந்தில் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர். தொடர்ந்து பல பண்பாட்டு நிகழ்வுகளையும் நிகழ்த்தி வருகின்றனர்.

**5. வாழை இலையில் உண்பதால் கிடைக்கும் நன்மைகள் யாவை?**

(i) வாழையிலையில் உணவு உண்பவர்களுக்கு நோய்கள் வருவதில்லை. தொடர்ந்து வாழையிலையில் உணவு உட்கொண்டு வந்தால் தோல் பளபளப்பாகும்.

(ii) உடல் நலம் பெறும், மந்தம், வலிமைக்குறைவு, இளைப்பு போன்ற பாதிப்புகள் நீங்கும். பித்தம் தணியும்.

(iii) வாழையிலையின் மேல் இருக்கும் பச்சை தன்மை உணவை எளிதில் சீரணமடையச் செய்வதுடன் வயிற்றுப் புண்ணை ஆற்றும் தன்மை கொண்டது.

(iv) நன்கு பசியைத் தூண்டுகிறது. வாழையிலையில் உண்பவர்கள் நோய்நொடியின்றி வாழ இயலும்.



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**நெடுவினா**

1. **வீட்டில் திண்ணை அமைந்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை, பசித்தவர்க்கு உணவிடல் இதுபோன்ற செயல்கள் அன்றும் இன்றும் தொடர்ந்துகொண்டிருப்பதை அழகுற விவரித்து எழுதுக.**

**முன்னுரை :**

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும், இருக்க இடமும், கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல் ஆகும். விருந்தினர் என்பவர் உறவினர் அல்லர். முன்பின் அறியாத புதியவர்களே விருந்தினர் ஆவர்.

**வீட்டில் திண்ணை அமைத்த காரணம் :**

பண்டைய காலங்களில் வீடு கட்டும் போது வீட்டின் முன்புறம் புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு திண்ணையையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர்.

**விருந்தினர் பேணுதல் :**

விருந்தினரைப் பேணுதல் பண்டைய தமிழரின் இல்லறக் கடமையாக இருந்தது. கணவனைப் பிரிந்த கண்ணகி அவனைப் பிரிந்ததைவிட, விருந்தினரைப் பேண முடியாமல் வருந்தியதாக இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்ததாகக் கம்பர் கூறியுள்ளார். "விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை" கலிங்கத்துப் பரணியில் செயங்கொண்டார் உவமையாகக் கையாண்டுள்ளார்.

**தமிழர் பண்பாட்டில் ஈகை :**

நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு இருந்தது குறித்து **நற்றிணை** குறிப்பிடுகிறது. தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டு குத்தியெடுத்து விருந்தினர்க்கு உணவளித்தாள் தலைவி என்று **புறநானூறு** குறிப்பிட்டுள்ளது. நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல்மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணாற்றுப்படை. இல்லத்தின் வாயிலை இரவில் மூடுவதற்கு முன் "உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா?" என்று கேட்கும் வழக்கம் இருந்ததை குறுந்தொகை மூலம் அறியமுடிகிறது.

**பசித்தவர்க்கு உணவிடல் :**

முதல்நாள் தன்னிடமிருந்த பழைய வாளை அடகு வைத்து விருந்தினரின் பசியை நீக்கிய தலைவன் மறுநாள் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணயம் வைத்து விருந்தளித்த செய்தியை புறநானூறு மூலம் அறிய முடிகிறது. இளையான்குடி மாறநாயனார் வீட்டுக்கு வந்த சிவனடியாரின் பசியைப் போக்குவதற்கு வீட்டில் தானியம் இல்லாததினால் அன்று விதைத்த நெல்லை அரித்து வந்து, சமைத்து விருந்து படைத்ததை பெரியபுராணம் கூறுகிறது.

**விருந்தோம்பல் அன்றும் இன்றும் :**

சங்க காலத்தில் அரசர், வறியோர் யாராக இருந்தாலும் விருந்தினர்களைப் போற்றினர். இன்று புதியவர்களான விருந்தினர்களை ஏற்பது குறைந்துவிட்டது. உறவினர், நண்பர்களை மட்டும் விருந்தினர்களாகப் போற்றுகின்றனர்.இருப்பினும் திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களை அன்போடு போற்றுவது இன்றும் நடைபெறுகிறது.காலப்போக்கில் வீடுகளில் நடைபெற்ற இல்லவிழாக்கள் திருமணக்கூடங்களுக்கு இடம்பெயர்ந்து விட்டன. திருமண ஏற்பட்டாளர்களே விருந்தோம்பலை செய்கின்றனர்.

**முடிவுரை :**

பண்டைத் தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் செழித்திருந்த விருந்தோம்பல் பண்பாடு தற்போது மண்டபங்களில் பின்பற்றப்படுகிறது. தமிழரின் அடையாளமாக விளங்கும் விருந்தோம்பலை போற்றி, நாமும் தொடர வேண்டும்.

☆ ☆ ☆



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



பண்பாடு – கூட்டாஞ்சோறு | கவிதைப் பேழை

இயல் 3

# காசிக்காண்டம்

– அதிவீரராம பாண்டியர்

## நூற்குறிப்பு

காசிநகரத்தின் பெருமைகளைக் கூறுகின்ற நூல் 'காசிக்காண்டம் ஆகும். இந்நூலில் துறவு, இல்லறம், பெண்களுக்குரிய பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறுவாழ்வில் அடையும் நன்மைகள் ஆகியவை பற்றிக் கூறப்பட்டுள்ளன.

## ஆசிரியர் குறிப்பு

| | |
|---|---|
| ஆசிரியர் | : கொற்கையின் மன்னர் – அதிவீரராம பாண்டியர். |
| பட்டப் பெயர் | : சீவலமாறன் |
| இயற்றிய பிறநூல்கள் | : வெற்றிவேற்கை என்று அழைக்கப்படும் நறுந்தொகை, நைடதம், லிங்கபுராணம், வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்மபுராணம். |
| சிறப்பு | : மன்னராக இருந்தும் சிறந்த தமிழ்ப் புலவராகத் திகழ்ந்தார். |

## பாடப்பகுதி

'இல்லொழுக்கம்' என்ற பகுதியில் உள்ள பதினேழாவது பாடல்.

பாடல்

### காசிக்காண்டம்

**விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்**
**வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்**
**திருந்துற நோக்கல வருக என உரைத்தல்**
**எழுதல் முன் மகிழ்வன செப்பல்**
**பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்**
**போமெனில் பின் செல்வதாதல்**
**பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்**
**ஒழுக்கமும் வழிபடும் பண்பே.**
**– இல்லொழுக்கம், (பா எண் : 17)**



## சொல்லும் பொருளும்

1. விருந்தினனாக ஒருவன் வந்து – விருந்தினராக ஒருவர் வந்தால்
2. எதிரின் வியத்தல் – அவரின் எதிரில் வந்து மகிழ்வுடன் பேசுதல்
3. நன்மொழி இனிது உரைத்தல் – நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல்
4. திருந்துற நோக்கல் – அவரை முகமலர்ச்சியுடன் பார்த்தல்
5. வருக என உரைத்தல் – 'வீட்டிற்குள் வருக' என்று வரவேற்றல்
6. எழுதல் முன் மகிழ்வன செப்பல் – அவர் எதிரே நின்று மனம் மகிழும்படியாகப் பேசுதல்
7. பொருந்து மற்றுஅவன் தன் அருகுற இருத்தல் – பொருந்தும் வகையில் அவர் அருகில் அமர்தல்
8. போமெனில் பின் செல்வதாதல் – அவரைப் பின்தொடர்ந்து சென்று வழியனுப்பி வைத்தல்
9. பரிந்து நன்முகமன் வழங்கல் – அவரிடம் இனிய புகழுரைகள் கூறுதல்
10. இவ்வொன்பான் – ஆகிய இந்த ஒன்பதும்
11. ஒழுக்கமும் வழிபடும் பண்பே – விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கமாகும்.

## பொருளுரை

விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை வியந்து உரைத்தல், நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல், முகமலர்ச்சியுடன் அவரை நோக்குதல், 'வீட்டிற்குள் வருக' என்று அவரை வரவேற்றல், அவர் எதிரில் நிற்றல், அவர் மனம் மகிழுமாறு பேசுதல், அவர் அருகிலேயே அமர்ந்து கொள்ளுதல், அவர் விடைபெற்றுச் செல்லும்போது வாயில் வரை தொடர்ந்து செல்லுதல், அவரிடம் இனிய புகழுரைகளைக் கூறுதல் ஆகிய ஒன்பது பண்புகளும் விருந்தோம்பலின் இல்லற ஒழுக்கமாகும்.



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



### விரிவான விளக்கம்

ஒருவர் விருந்தினராக நம் எதிரில் வந்தால்,

1. "அவரிடம் புது மகிழ்ச்சியைக் காட்ட வேண்டும். அதாவது அவரைக் கண்டதால் ஏற்பட்ட வியப்பு, ஆனந்தம் இரண்டையும் ஒருங்கே காட்டுவது. இதுவே 'வியந்து உரைத்தல்' எனக் கூறப்பட்டுள்ளது.
2. உபசாரமாக இனிய சொற்களைப் பேச வேண்டும்.
3. அன்பு கனிந்த முகத்தோடு அவரைப் பார்க்க வேண்டும். இதுவே முகமலர்ச்சி ஆகும்.
4. 'வாருங்கள்' என வரவேற்க வேண்டும்.
5. இருக்கையில் அமர்ந்திருந்தால் எழுந்து வரவேற்க வேண்டும்.
6. அவரிடம் மகிழ்ச்சியான சொற்களைப் பேச வேண்டுட்ம.
7. விருந்தினருக்கு அருகே தக்க முறையில் நெருக்கமாக அமர வேண்டும்.
8. அவர் விடைபெறும்போது அவர்களுடன் வாயில்வரை செல்ல வேண்டும்.
9. அவரிடம் முகமலர்ச்சியுடன் புகழுரைகள் கூறி வழியனுப்ப வேண்டும்.

மேற்கண்ட ஒன்பது பண்புகளும் விருந்தோம்பலின் சிறந்த ஒழுக்கங்களாகும்.

### கூடுதல் பகுதி

பாடல்

**"ஒப்புடன் முகம் மலர்ந்தே**
**உபசரித்து உண்மை பேசி**
**உப்பிலாக் கூழ் இட்டாலும்**
**உண்பதே அமிர்தம் ஆகும்**
**முப்பழமொடு பால் அன்னம்**
**முகம் கடுத்து இடுவாராயின்**
**கப்பிய பசியி னோடு**
**கடும்பசி ஆகும் தானே"**

**– விவேகசிந்தாமணி**

### பொருளுரை

விருந்தினராக வந்தவரை முகமலர்ச்சியுடன் வரவேற்று, உப்பில்லாத கூழைக் கொடுத்தாலும் அதை அமிர்தமாக எண்ணி அருந்துவர். ஆனால் கடுகடுப்பான முகத்துடன் மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளுடன் பால் சோற்றை அளித்தால், அதை உண்ண விரும்பாததுடன் விருந்தினரின், பசியையும் அதிகமாக்கி விடும்.

**குறிப்பு:** 'விவேக சிந்தாமணி' என்பது பழைமையான தமிழ் நூலாகும். சிறந்த நீதிகளைச் சொல்லும் இந்நூலின் ஆசிரியர் யார் என்பது அறியப்படவில்லை. இந்நூலில் 135 பாடல்கள் உள்ளன.

## கூடுதல் வினாக்கள்

### பொருள் தருக

| | |
|---|---|
| 1. அருகுற – அருகில் | 6. இவ்வொன்பான் – இந்த ஒன்பதும் |
| 2. முகமன் – ஒருவரை நலம் வினவிக் கூறும் விருந்தோம்பல் சொற்கள் | 7. திருந்துற – முகமலர்ச்சியுடன் |
| 3. வியத்தல் – மகிழ்வைக் கட்டுதல் | 8. செப்பல் – கூறுதல் (அ) சொல்லுதல் |
| 4. நன்மொழி – நல்ல சொற்கள் | 9. பரிந்து – புகழ்ந்து |
| 5. போமெனில் – விடைபெற்றுச் செல்லும்போது | 10. நோக்கல் – பார்த்தல் |
| 5. உரைத்தல் – பேசுதல் | |

### பிரித்தெழுதுக

| | |
|---|---|
| 1. விருந்தினனாக – விருந்தினன் + ஆக | 3. செல்வதாதல் – செல்வது + ஆதல் |
| 2. நன்மொழி – நன்மை + மொழி | |

### இலக்கணக் குறிப்பு

| | |
|---|---|
| 1. நன்மொழி | பண்புத்தொகை |
| 2. வியத்தல், நோக்கல், எழுதல், உரைத்தல், செப்பல், இருத்தல் | தொழிற்பெயர்கள் |
| 3. வருக | வியங்கோள் வினைமுற்று |



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

> விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
> வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
> திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
> எழுதல் முன் மகிழ்வன செப்பல்

1. **இப்பாடலடிகள் இடம்பெற்ற நூல் ............... .**
   அ) விவேகசிந்தாமணி ஆ) நீதிவெண்பா இ) காசிக்காண்டம் ஈ) சுந்தரகாண்டம்
   **விடை இ) காசிக்காண்டம்**

2. **இந்நூலை இயற்றியவர் ............... .**
   அ) கம்பர் ஆ) அதிவீரராம பாண்டியர்
   இ) குமரகுருபரர் ஈ) ஔவையார்
   **விடை ஆ) அதிவீரராம பாண்டியர்**

3. **விருந்தினரிடம் பேசும் மொழி ............... .**
   அ) வன்மொழி ஆ) நன்மொழி இ) பொய்மொழி ஈ) செம்மொழி
   **விடை ஆ) நன்மொழி**

4. **திருந்துற நோக்கல் – பொருள் ............... .**
   அ) முகமலர்ச்சியுடன் நோக்குதல் ஆ) சினத்துடன் நோக்குதல்
   இ) வெறுப்புடன் நோக்குதல் ஈ) இவற்றில் எதுவுமில்லை
   **விடை அ) முகமலர்ச்சியுடன் நோக்குதல்**

5. **நன்மொழி – இலக்கணக்குறிப்பு ............... .**
   அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) உம்மைத்தொகை ஈ) உவமைத்தொகை
   **விடை அ) பண்புத்தொகை**

## நிரப்புக.

1. **அதிவீரராம பாண்டியர் ............... நாட்டின் மன்னர் ஆவார்.** **விடை கொற்கை**
2. **வெற்றிவேற்கை என்ற நூலின் வேறு பெயர் ............... .** **விடை நறுந்தொகை**
3. **கொற்கையின் சிறப்பு ............... .** **விடை முத்துக் குளித்தலில் சிறந்து விளங்கியது**
4. **"உப்பிலாக் கூழ் இட்டாலும் உண்பதே அமிர்தம்'' என்ற பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் ............... .** **விடை விவேகசிந்தாமணி**
5. **காசிக்காண்டத்தில் விருந்தோம்பலின் பண்புகளாக கூறப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை ............... .** **விடை ஒன்பது**
6. **காசி நகரத்தின் பெருமைகளை கூறும் நூல் ............... .** **விடை காசிக்காண்டம்**

## சிறுவினா

1. **விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கமாகக் காசிக்காண்டம் கூறுவன யாவை?**
   (i) விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை வியந்து உரைத்தல்.
   (ii) நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல்.
   (iii) முகமலர்ச்சியுடன் அவரை நோக்குதல்.
   (iv) “வீட்டிற்குள் வருக” என்று வரவேற்றல்.
   (v) அவர் எதிரில் நிற்றல்.
   (vi) அவர் முன் மனம் மகிழும்படி பேசுதல்.
   (vii) அவர் அருகிலேயே அமர்ந்து கொள்ளுதல்.
   (viii) அவர் விடைபெற்றுச் செல்லும்போது வாயில் வரை பின் தொடர்ந்து செல்லல்.
   (ix) அவரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல் ஆகிய ஒன்பதும் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கமாகும்.

☆ ☆ ☆



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



இயல் 3

பண்பாடு - கூட்டாஞ்சோறு | கவிதைப் பேழை

# மலைபடுகடாம்

– பெருங்கௌசிகனார்

## நூற்குறிப்பு

பத்துப்பாட்டு நூல்களுள் **'மலைபடுகடாம்'** ஒன்றாகும். **583** அடிகளைக் கொண்ட இந்நூல் **கூத்தராற்றுப்படை** என்றும் அழைக்கப்படுகிறது. மலையை யானையாக உருவகம் செய்து, மலையின்கண் எழுந்த பலவகை ஓசைகளை அதன் மதம் என்று விளக்குவதால் இந்நூலிற்கு மலைபடுகடாம் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**நன்னன்** என்னும் குறுகிய மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு** இந்நூலை இயற்றியவர் இரணிய முட்டத்துப் பெருகுன்றூர் பெருங்கௌசிகனார்.

**பாடப்பகுதி** இந்நூலில் உள்ள 158 ஆவது அடி முதல் 169–ஆவது அடி வரை நமது பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

## ஆற்றுப்படை - விளக்கம்

வள்ளல் ஒருவரிடம் சென்று பரிசுகளைப் பெற்று வந்த கூத்தன், வள்ளலை நாடி எதிரே வருகின்ற கூத்தனை அழைத்து "நாங்கள் வள்ளலிடம் சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம். நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம்பெற்று வாழ்வாயாக" என்று கூறுதல் ஆற்றுப்படை எனப்படுகிறது. ஆறு – வழி என்று ஒரு பொருள் உண்டு. ஒருவர், மற்றொருவரை வழிப்படுத்தவதால் (வழியைக் காட்டுதல்) ஆற்றுப்படை என்று பெயர் அமைந்தது

**பாடல்**

**மலைபடுகடாம்**

**அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,**
**கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து**
**சேந்த செயலைச் செப்பம் போகி,**



## சொல்லும் பொருளும்

1. அன்று அவன் அசைஇ – அந்த இடத்திலேயே பகலில் இளைப்பாறி (ஓய்வெடுத்து)
2. அல்சேர்ந்து அல்கி – இரவுப்பொழுதில் ஒன்றாக சேர்ந்து தங்கி
3. கன்று எரி – கன்றிய நெருப்பு (எரியும் நெருப்பு)
4. ஒள்இணர் – ஒளிரும் பூங்கொத்துகளை
5. கடும்பொடு மலைந்து – சுற்றத்தாரோடு அணிந்து கொள்ளுங்கள்.
6. சேந்த செயலைச் செப்பம் போகி – சிவந்த அசோக மரத்தை உடைய வழியில் சென்று

## பொருளுரை

அந்த இடத்திலேயே பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள். இரவில் சேர்ந்து தங்குங்கள். எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளை சுற்றத்தாரோடு அணிந்து கொள்ளுங்கள். சிவந்த பூக்களைக் கொண்ட அசோக மரங்களை உடைய பொருத்தமான பாதையில் செல்லுங்கள்.

**பாடல்**

**அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்**
**சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி**
**நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்**
**மான விறல்வேள் வயிரியம் எனினே**



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



### சொல்லும் பொருளும்

| | | |
|---|---|---|
| 1. | அலங்கு கழை நரலும் | – அசையும் மூங்கில்கள் ஓசை எழுப்பும் |
| 2. | ஆரிப்படுகர் | – வழிகளில் மலைச்சரிவுகளில் அமைந்துள்ள சிற்றூரை அடைந்து |
| 3. | சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி | – வழிகளில் மலைச் சரிவுகளில் அமைந்துள்ள சிற்றூரை அடைந்து |
| 4. | நோனாச் செருவின் வலம்படு நோன்தாள் | – பகைவரைப் பொறாமல் மேற்கொள்ளும் போரிணையும் |
| 5. | மானா விறல்வேள் | – வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனுடைய |
| 6. | வயிரியம் எனினே | – கூத்தர்கள் என்று சொல்லுங்கள். |

### பொருளுரை

அசையும் மூங்கில்கள் ஓசை எழுப்பும் கடினமான பாதையில் (பள்ளங்கள் உடைய பாதையில்) சென்று மலைச்சரிவுகளில் உள்ள சிற்றூரை அடைந்து அங்கு உள்ளவர்களிடம், "பகைவர்களைப் பொறுக்க முடியாமல் மேற்கொள்ளும் போரில் வெற்றி தரக்கூடிய வலுவான முயற்சியையும் மானத்தையும் வீரத்தையும் உடைய நன்னனின் கூத்தர்கள்" என்று சொல்லுங்கள்.

**பாடல்**

**நும்இல் போல நில்லாது புக்கு,**
**கிழவிர் போலக் கேளாது கெழீஇ**
**சேட் புலம்பு அகல இனிய கூறி**
**பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையோடு**
**குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்.**

### சொல்லும் பொருளும்

| | | |
|---|---|---|
| 1. | நும் இல் போல | – உங்களது இல்லம் போல எண்ணி |
| 2. | நில்லாது புக்கு | – தயக்கம் எதுவுமின்றி உள்ளே செல்லுங்கள் |
| 3. | கிழவிர் போல | – உறவினர் போலவே |
| 4. | கேளாது கெழீஇ | – உங்களிடம் எதுவும் கேட்காமலேயே பழகுவார்கள் |
| 5. | சேட் புலம்பு அகல | – நீண்ட தூரத்திலிருந்து வந்த உங்கள் சோர்வு நீங்கும் படியாக |
| 6. | இனிய கூறி | – இனிய சொற்களைப் பேசி |
| 7. | பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு | – மிகச் சொரிந்த நெய்யில் பொரித்து வெந்த பருத்த தசைத் துண்டுகளையும் |
| 8. | குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவீர் | – நிறத்தோடு கூடிய தினைச் சோற்றையும் பெறுவீர்களாக. |

### பொருளுரை

அங்கு அவர்களது வீட்டிற்குள் உங்கள் இல்லம் போலவே எண்ணி உரிமையுடன் செல்லுங்கள். உறவினர் போலவே எண்ணி உரிமையுடன் சொல்லுங்கள். உறவினர் போலவே அவர்கள் உங்களிடம் பழகுவர். நீண்ட தூரத்திலிருந்து வந்த உங்கள் துன்பம், சோர்வு ஆகியவை நீங்கும்படியாக இனிய சொற்களை அவர்கள் கூறுவர். நெய்யில் வெந்த பருத்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் அவர்கள் வழங்க நீங்கள் பெறுவீர்கள்.

### விரிவான விளக்கம்

மலைப் பகுதியைச் சார்ந்த சிற்றூர்களில் வாழும் மக்களின் விருந்தோம்பல் பண்பு இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. மலைப் பகுதியில் வாழும் மக்களின் இல்லங்களில் கேளாது புகுதலும், உறவு கொண்டாடுவதும், அவர்கள் இனிய சொற்களைக் கூறி, விருந்து அளித்தலும் நடைமுறையில் இருந்ததை அறிய முடிகிறது. நன்னனின் கூத்தர் என்று கூறுவதால் கிடைக்கும் உபசரிப்புகளின் மூலம், நாட்டு மக்கள் நன்னனிடம் கொண்ட அன்பையும் பெருமதிப்பையும் உணர முடிகிறது.



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

This is Only for Sample
For Full Book Order Online or Available at All Leading Bookstores



# கூடுதல் வினாக்கள்

## பொருள் தருக

| | |
|---|---|
| 1. அசைஇ – இளைப்பாறி | 9. இறடி – தினை |
| 2. அல்கி – தங்கி | 10. பொம்மல் – சோறு |
| 3. கடும்பு – சுற்றம் | 11. கன்று எரி – கன்றிய நெருப்பு (எரியும் நெருப்பு) |
| 4. நரலும் – ஒலிக்கும் | 12. சேந்த – சிவந்த |
| 5. ஆரி – அருமை | 13. பாக்கம் – சிற்றூர் |
| 6. படுகர் – பள்ளம் | 14. பரூஉக்குறை – பருத்த தசைத் துண்டுகள் |
| 7. வயிரியம் – கூத்தர் | 15. குரூஉ – நிறம் |
| 8. வேவை – வெந்தது | |

## இலக்கணக் குறிப்பு தருக

| | |
|---|---|
| 1. அசைஇ, கொழீஇ | சொல்லிசை அளபெடைகள் |
| 2. பரூஉக், குரூஉக்கண் | செய்யுளிசை அளபெடைகள் |
| 3. கன்று எரி | வினைத்தொகை |
| 4. மலைந்து, கூறி, எய்தி | வினையெச்சங்கள் |
| 5. பொழிந்த | பெயரெச்சம் |
| 6. குறை | ஆகுபெயர் |

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,
கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,
அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி

1. **இப்பாடல் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் ............... .**
அ) காசிக்காண்டம் ஆ) கூத்தராற்றுப்படை இ) பொருநராற்றுப்படை ஈ) சிறுபாணாற்றுப்படை
**விடை ஆ) கூத்தராற்றுப்படை**

2. **இந்நூலின் ஆசிரியர் ............... .**
அ) கபிலர் ஆ) நத்தத்தனார்
இ) பெருங்கௌசிகனார் ஈ) அதிவீரராம பாண்டியர்
**விடை இ) பெருங்கௌசிகனார்**

3. **"சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி " என்னும் அடியில் பாக்கம் என்பது ............... .**
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர் **விடை ஈ) சிற்றூர்**

4. **அசைஇ என்னும் சொல்லின் பொருள் ............... .**
அ) உருமாறி ஆ) இளைப்பாறி
இ) பணியாற்றி ஈ) பாதுகாத்து
**விடை ஆ) இளைப்பாறி**

5. **சுற்றம் என்ற பொருளைத் தரும் சொல் ............... .**
அ) கடும்பு ஆ) அல்கி இ) படுகர் ஈ) சிலம்பு **விடை அ) கடும்பு**



Click Here : https://bit.ly/3xcdrBt Ph:9600175757 / 8124201000

www.surabooks.com